30.09.2015

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

## ஏக்கருக்கு ரூ.1 லட்சம் வருவாய் - சொட்டு நீர் பாசனத்தில் சாதிக்கும் விவசாயி



சிவகாசி அருகே வெம்பக்கோட்டை கங்கர்செவல் பகுதியில் வெண்டை, மிளகாய், புடலங்காய், தக்காளி போன்ற காய்கறி வகைகளை சொட்டு நீர் பாசன முறையில் சாகுபடி செய்து ஆண்டிற்கு ரூ.5 லட்சத்திற்கும் மேல் வருமானம் ஈட்டி வருகிறார் விவசாயி ராமசாமி. அவர் கூறியதாவது: எங்கள் பகுதி செவல் மண் நிறைந்தது.வெம்பக்கோட்டை வேளாண் தோட்டத் துறை மூலம் கடந்த 5 ஆண்டு முன் 75 சதவீத மானியத்துடன் சொட்டு நீர் பாசன முறையை 12 ஏக்கரில் அமைத்தேன். இந்த பயன்பாட்டு முறையை கையாண்டதன் மூலம் குறைந்த விதை அளவு கொண்டு, களையின்றி விவசாயம் செய்ய

ஏதுவாக அமைந்தது. பாத்திபாசனத்தில் 25 சதவீத நிலங்கள் வீணாகிறது. சொட்டு நீர் பாசன முறையில் 1 ஏக்கரில் விதைப்புக்கு ஏற்ற அளவில் மகசூல் எடுக்க முடியும்.

இதில் வேர் வளர்ச்சி அபரிமிதமாக இருப்பதோடு, அதிக ஆட்செலவு இல்லாமலும் போகிறது. நீர் செலவும் குறைக்கப்படுவதால் விவசாயம் செய்ய உகந்ததாக சொட்டு நீர் பாசனம் இருக்கிறது. வெண்டை, புடலங்காய், தக்காளி, மிளகாய் வரிசை நடவு முறையில் பயிர் செய்யப்படுவதால் நோய் தொற்று குறைகிறது. அறுவடை செய்யவும் ஏதுவாகவும் அமைகிறது. சொட்டு நீர் பாசன முறையில் 3 நாட்களுக்கு ஒரு முறை பாசன நீர் விட்டால் போதும். வாரத்திற்கு ஒருமுறை பாசன நீரில், நீரில் கரையக்கூடிய ஆல் 19 உரத்தை கரைசலாக்கி கலந்து விடுகிறோம். இதன் மூலம் தலைமணி, சாம்பல் போன்ற போஷாக்கு நிறைந்த சத்துக்கள் கிடைத்து செடி வளர்ச்சிக்கு நல்வகையில் ஊக்குவிக்கிறது.இவை சீரான முறையில் கடைபிடிப்பதால் வெண்டை 45 நாட்களில் காய் ஒடிக்க முடியும். புடலங்காய் 55 நாட்கள், தக்காளி 70 நாட்கள், மிளகாய் 105 நாட்கள் முதல் அறுவடை செய்ய உகந்ததாக மாறிவிடுகிறது. அதன் பின் தினமும் கிலோ கணக்கில் காய்கள் பெறமுடியும். ஒவ்வொரு காய்கறிகளில் இருந்து ஒரு ஏக்கருக்கு குறைந்தது ரூ. 1 லட்சம் பெற முடிகிறது. அனைத்து காய்கறிகளையும் எடுத்துக் கொண்டால் லாபம் மட்டும் ரூ. 5 லட்சம் வரை பெற முடியும்,"என்றார்.சந்தேகங்களுக்கு 97869 20592 ல் தொடர்பு கொள்ளலாம்.

## ஆர்கானிக் சான்று

இயற்கை வேளாண்மை என்பது ஒரு சில குறிப்பிட்ட முறைகளைத் தவறாது கடைபிடித்து நிலைத்த, நீடித்த வரவு பெற எடுக்க வேண்டிய

எளிய செலவு குறைந்த உத்தியே. இதில் கோடை உழவு செய்தல், இயற்கை உரங்கள் தொழுஉரம், மண்புழு உரம், பண்ணைக்கழிவுகள், பிண்ணாக்கு வகைகள், தழை உரம், அசோலா, உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போ பேக்டீரியா, ரைசோபியம் பயன்படுத்துவது அவசியம். உயிரியல் பூஞ்சாண மருந்துகளாக சூடோமோனாஸ், ட்ரைக்கோடெர்மா விரிடி பயன்படுத்தி விதை நேர்த்தி செய்தல், கலப்புப் பயிர் சாகுபடி, ஊடுபயிர் சாகுபடி மற்றும் பொறிப்பயிர் சாகுபடி செய்யலாம்.உயிரியல் முறையில் பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்த வேண்டும். இயற்கையான முறையில் தயார் செய்யக்கூடிய ஊட்டச்சத்துக் கலவைகளான பஞ்சகவ்யா, அமிர்தக் கரைசல், மீன் அமிலம், முட்டை அமிலம், சுரப்பு மோர் கரைசல், ஜீவாமிர்தம், வேம்பு அஸ்திரம் பிரம்மாஸ்திரம், கன ஜீவாமிர்தம் மற்றும் பிஜாமிர்தம் ஆகியவற்றை பயிருக்கு கொடுத்து மகசூலை அதிகரித்து நல்ல காசு பார்க்கலாம். கால்நடைகளை பண்ணையில் பராமரிக்க வேண்டும். அவற்றிற்கு தீவனமும் பண்ணையிலேயே விளைந்ததாக இருக்க வேண்டும்.அங்ககச் சான்று பெற தனியே விண்ணப்ப படிவம் உள்ளது. பண்ணையில் பொது விவரக் குறிப்பு வரைப்படம், மண் மற்றும் பாசன நீர் பரிசோதனை முடிவுகள், ஆண்டு பயிர் திட்டம் துறையுடனான ஒப்பந்தம் நிரந்தர கணக்கு எண். (பான் கார்டு) ஆகிய விபரங்களுடன் 3 ரகங்களில் உரிய விண்ணப்பத்துடன் உரிய கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்கலாம்.

தனி நபராக இருப்பின் சிறு குறு விவசாயிகள் ரூ.2,700/- மற்றும் இதர விவசாயிகள் ரூ.3,200/- கட்டணமாக விதை சான்று மற்றும் அங்ககச் சான்றளிப்பு இயக்குநர், கோவை-13ல் கட்டலாம். இதனை நம் குழு பதிவுக்கு ரூ.7,200/- மற்றும் வணிக நிறுவனமாக இருப்பின் ரூ.8,400/- கட்ட வேண்டும். விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றளிப்பு இயக்குநர் 1424-ஏயில் தடாகம் சாலை, கோவை-13ல் மேலும் விபரம் பெறலாம்.

மேலும் தோட்டக்கலைப்பயிர் சாகுபடியில் சந்தேகமா? 98420 07125 என்ற எண்ணை தொடர்பு கொள்ளவும்.\- **டாக்டர் பா.இளங்கோவன்,தோட்டக்கலை உதவி இயக்குநர்,உடுமலை, திருப்பூர்.**

## சின்ன சின்ன செய்திகள்



**பால் உற்பத்தியில் செலவை குறைக்க இயந்திரமயமாக்கல்:** கால்நடை வளர்ப்புக்கு தேவையான பசுந்தீவன உற்பத்தி செய்ய தெளிப்பு நீர் பாசனமுறையை பயன்படுத்தி குறைந்த தண்ணீர் செலவில் தீவன உற்பத்தியை செய்யலாம். தீவன வயல்களில் சிறு டிராக்டர்கள் பவர் டிரில்லர்கள், பெரிய டிராக்டர்கள் சென்று வரும் அளவுக்கு போதிய இடைவெளி விட்டு பயிர்களை விதைக்க வேண்டும். மொபைல் ஷ்ரெட்டர் என்கிற பெயரில் கிடைக்கும் இயந்திரத்தில் சிறு மாறுதல் செய்து விட்டால் இந்த இயந்திரத்தைப் பயன்படுத்தி ஒரே நேரத்தில் தீவன அறுவடை செய்தால் மற்றும் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி டிராக்டர் டிரைலர்களில் கொட்டுதல் போன்ற கடுமையான வேலைகளை எளிதில் செய்யலாம். சிறிய பண்ணையாளர்கள் "பிரஷ் கட்டா' என்னும் இயந்திரத்தை பயன்படுத்தி தீவனம் அறுவடை செய்யலாம். அறுவடை செய்ய தீவனத்தை "சாப்கட்டா' மூலம் சிறு சிறு துண்டுகளாக வெட்டி கொடுக்கலாம். தற்பொழுது பசுந்தீவனத்தை சிறு சிறு துண்டுகளாக வெட்டவும், தானியங்களை தூளாக அரைத்து கலப்பு தீவனம் உற்பத்தி செய்யவும் ஒரே இயந்திரம் வடிவமைக்கப்பட்டுள்ளது. பண்ணைகளிலிருந்து சாணத்தை அப்புறப்படுத்துவது ஒரு அதிக சக்தி செலவாகும் கடினமான வேலை. சாணத்தை அப்புறப்படுத்துவதற்கு "ஸ்குரு கன்வேயர்' முறையை பயன்படுத்தலாம். இந்த முறையில்

பண்ணையிலிருந்து சாணத்தை "ஸ்குரு கன்வேயர்' மூலம் எரு குழிக்கோ அல்லது சாண எரிவாயு குழிக்கோ நேரடியா எடுத்துச் செல்லலாம். சாணத்தை குழிக்குள் தள்ளி விட மட்டும் ஆள் தேவை. "சாண எரிவாயு' சாணத்திலிருந்து வெளியேறும் கழிவை போதுமான தண்ணீர் கலந்து "ஸ்லர்ரி பம்ப்' மூலம் பசுந்தீவன சாகுபடிக்கு பயன்படுத்தலாம். பால் கறவை இயந்திரத்தில் இரண்டு வகைகள் உள்ளன. ஒரு வகை கன்று மடியில் பாலைக் குடிப்பது போல செயல்படுவது. மற்றொரு வகை மடியிலிருந்து பாலை மெதுவாக உறிஞ்சும். நாளொன்றுக்கு 10 லிட்டருக்கு மேல் கொடுக்கும் மாடு களுக்கு முதல் வகை இயந்திரத்தையும் 10 லிட்டருக்கு குறைவாக பால் தரும் மாடுகளுக்கு இரண்டாவது வகை இயந்திரத்தையும் பயன்படுத்தலாம். மடியில் பால் சுரப்பு குறைந்தவுடன் இயந்திரத்தை மடியில் இருந்து எடுத்து விட வேண்டும். சுகாதாரமாக கறக்கும் பாலை நேரடியாக குளிரூட்டம் 4 டிகிரி செய்து பாக்கெட் போடும் இயந்திரத்திற்கு அனுப்பி பாக்கெட் செய்து விற்பனை செய்யலாம். தகவல் : க.குமரேசன், பேராசிரியர் மற்றும் தலைவர், கால்நடை உற்பத்தி பொருட்கள் தொழில்நுட்பத்துறை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி. அலைபேசி : 94434 43346.

**மகோகனி**: மரத்தின் சிறப்புகள் பற்றி கோயம்புத்தூரில் உள்ள வன மரபியல் மற்றும் பயிர் பெருக்கு நிறுவனத்தின் விதை தொழில்நுட்பவியல் துறை விஞ்ஞானி முனைவர் ம.வே.துரை, வழங்கும் செய்தி. "மகோகனி' இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் மரத்துக்காகவும், அலங்கார மரமாகவும் பயிரிடப்பட்டது. தற்போது மிகவும் பழமையான மகோகனி மரங்கள் அதிக அளவில் தென்னிந்தியாவில் கேரளா, தமிழ்நாடு மற்றும் கர்நாடகாவில் காணப்படுகின்றன.

சிறந்த மர வேலைகளுக்கு மட்டுமல்ல, மருந்து பொருளாகவும்

பயன்படுகிறது. நீரிழிவு நோய், மூட்டுவலி, வயிற்றுப்போக்கு, காய்ச்சல், மலேரியா, இருமல் மற்றும் ரத்த அழுத்தம் ஆகிய நோய்களைக் குணப்படுத்த மலேசிய மக்கள் பல தலைமுறையாக இம்மரத்தை பயன்படுத்தி வருகின்றனர். வெள்ளை நிறத்தில் உள்ள காய்ந்த மகோகனி விதைகள் மிகவும் கசப்புத்தன்மை உடையவை. தினமும் ஒன்று அல்லது இரண்டு முழு மகோகனி விதைகளைச் சாப்பிடலாம். இதை உணவு உட்கொள்வதற்கு அரைமணி நேரம் முன்பாக உண்டு வந்தால் நீரிழிவு கட்டுக்குள் வந்து விடும். மேலும் மகோகனி விதையில் புற்றுநோய், நெஞ்சுவலி, குடல்புண் போன்ற நோய்களையும் குணப்படுத்தும் தன்மை உள்ளது. மகோகனி பழம் வைட்டமின்களை A, B1, B6, D மற்றும் E நார்ச்சத்து, போலிக் அமிலம், புரதம் மற்றும் மாவுச்சத்து போன்ற ஊட்டச்சத்துணவும் அளிக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள நாட்டு மருந்து கடைகளில் "தேன்கொட்டை' என்ற பெயரில் இந்த விதைகள் விற்பனை செய்யப்படுகிறது. தொடர்புக்கு: அலைபேசி 94459 44288.

**பனிவரகு தோசை:** தேவையான பொருட்கள்: பனி வரகு- 1கப், உளுந்து- 1/4 கப், வெந்தயம் - 1/4 தேக்கரண்டி, மிளகு-1 தேக்கரண்டி, உப்பு - தேவைக்கேற்ப; எண்ணெய் - தேவைக்கேற்ப. செய்முறை - பனிவரகு, உளுந்து, வெந்தயம் மூன்றையும் 4 மணி நேரம் ஊற விடவும். பிறகு மிளகு சேர்த்து மெதுவாக அரைத்து உப்பு சேர்த்து கலக்கவும். 2 மணி நேரம் புளிக்க விட்டு, பின் மெல்லிய தோசைகளாகச் சுட்டு சட்னியுடன் பரிமாறவும்.குறிப்பு: மிளகுக்குப் பதில் பச்சை மிளகாய் அல்லது காய்ந்த மிளகாய் சேர்த்து அரைக்கலாம்.தகவல்: கிருஷ்ணகுமாரி ஜெயக்குமார்,S3, B Block, Ponni Apartments 10-/4,Ganapathy 1st Street,Avvai Nagar, Thiruvanmiyur,Chennai-600 041.

## கோதாவரி - கிருஷ்ணா நதிநீர் இணைப்பு திட்டம்: சாதித்தது ஆந்திரா




நதிநீர் இணைப்பு என்பது, வெறும் கோஷமாக நிலவும் நிலையில், அதை செயல்படுத்தி சாதனை படைத்து உள்ளது, ஆந்திர மாநில அரசு. இந்தியாவிலேயே முதன்முறையாக, கோதாவரி - கிருஷ்ணா நதிகளை சத்தமில்லாமல் இணைத்து, கோதாவரி ஆற்றில் இருந்து, கடலில் கலக்கும் தண்ணீரில், 80 டி.எம்.சி., நீரை பெறும் திட்டத்தை செயல்படுத்தி, மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாகி உள்ளது, ஆந்திர மாநிலம்.ஆந்திராவில் உள்ள பெரிய நதிகளில் ஒன்று கோதாவரி. மகாராஷ்டிராவில் உருவாகி, சத்தீஸ்கர், தெலுங்கானா, ஆந்திரா வழியாக, 1,465 கி.மீ., பாய்ந்து, வங்காள விரிகுடா கடலில் கலக்கிறது. ஆண்டுதோறும் ஏற்படும் வெள்ளப் பெருக்கால், 3,000 டி.எம்.சி., தண்ணீர், வீணாக வங்கக் கடலில் கலக்கிறது.

### 174 கி.மீ., கால்வாய்:

கோதாவரியில் வீணாகும் தண்ணீரை சேமித்து, கிருஷ்ணா நதியுடன் இணைக்க, ஆந்திர அரசு முடிவு செய்தது. இதற்காக, கோதாவரி நதியில்,

போலாவரம் என்ற இடம் அருகே நீர்த்தேக்கம் கட்டி, அங்கிருந்து, 174 கி.மீ., கால்வாய் அமைத்து, கிருஷ்ணா மாவட்டம், விஜயவாடா அடுத்த, பெர்ரி கிராமம் அருகே, கிருஷ்ணா நதியுடன் இணைக்க திட்டம் தயாரிக்கப்பட்டது.இதற்கு, 'போலாவரம் கால்வாய் திட்டம்' என பெயரிடப்பட்டு, 2005ல் பணி துவங்கியது. மொத்தமுள்ள, 174 கி.மீ.,யில், 140 கி.மீ., துாரம் வரை மட்டுமே, கால்வாய் அமைக்கப்பட்டது; மீதமுள்ள, 34 கி.மீ., துாரத்தில், நிலம் கையகப்படுத்தும் பிரச்னை ஏற்பட்டதால், கால்வாய் அமைக்கப்படவில்லை.மேலும், போலாவரம் அருகில், கோதாவரி ஆற்றில் நீர்த்தேக்கம் அமைக்க, 16 ஆயிரம் கோடி ரூபாய் தேவைப்பட்டது. மத்திய அரசிடம் இருந்து, இந்த நிதியை பெறுவதில் ஏற்படும் காலதாமதத்தால், பணி துவக்கப்படவில்லை.இந்த நிதியை பெற, ஆந்திர அரசு, மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

## பட்டிசீமா திட்டம்:

இந்த நிலையில், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, கோதாவரி - கிருஷ்ணா நதியை இணைக்க, பட்டிசீமா திட்டத்தை, ஜனவரி மாதம் அறிவித்து, 1,400 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, உத்தரவு பிறப்பித்தார். மேலும், போலாவரம் கால்வாய் திட்டத்தின் கீழ், முடிவு பெறாத, 34 கி.மீ., துாரத்திற்கு நிலத்தை கையகப்படுத்த, தனியாக, 700 கோடி ரூபாயும் ஒதுக்கினார்.இத்திட்டத்தின்படி, பட்டிசீமா கிராமத்தில் குழாய்கள் பதித்து, கோதாவரி ஆற்றில் இருந்து மோட்டார் மூலம் தண்ணீரை இறைத்து, அது, 3.9 கி.மீ., துாரம் வரை, பூமிக்கடியில் பதிக்கப்பட்டுள்ள குழாய்கள் வழியாக கொண்டு செல்லப்பட்டு, போலாவரம் கால்வாயில் விடப்படும்.

திட்டத்தை, ஐதராபாத்தைச் சேர்ந்த, மெகா இன்ஜினியரிங் மற்றும் இன்ப்ராஸ்டிரக்சர் லிட்., என்ற நிறுவனம், 1,228 கோடி ரூபாய் மதிப்பில்

செய்து முடிக்க, ஒப்பந்தம் பெற்று, ஒரு ஆண்டில் பணியை முடிப்பதாக உத்தரவாதம் அளித்தது. பணி, மார்ச் 23ம் தேதி துவங்கி, ஆக., 15ம் தேதி நிறைவு பெற்றது.மேலும், பட்டிசீமாவில் இருந்து, ஒரு குழாய் பாதை மட்டும் அமைக்கப்பட்டு, செப்., 15ம் தேதி முதல், தண்ணீர் இறைத்து, போலாவரம் கால்வாயில் விடப்பட்டு, கிருஷ்ணா நதிக்கு கொண்டு செல்லப்பட்டது.

## அதிகாரிகள் சுறுசுறு:

**இதுகுறித்து, மெகா இன்ஜி., மற்றும் இன்ப்ராஸ்டிரக்சர் லிட்., நிறுவன நிர்வாகி ஒருவர் கூறியதாவது:**திட்ட காலம், ஒரு ஆண்டாக இருந்தாலும், அதற்குள் பணியை நிறைவு செய்ய வேண்டும் என, ஆந்திர அரசு கூறியது. அதற்கேற்ப நாங்கள் ஏற்பாடுகள் செய்து, பணியை துவங்கினோம்.அரசு சார்பில், விவசாயிகளை சந்தித்து அவர்களுக்கான இழப்பீட்டு தொகை வழங்கும் பணியை, மார்ச் மாதம் துவங்கி, ஒரே மாதத்தில் முடித்துக் கொடுத்தனர்; இதையடுத்து கால்வாய் அமைக்கப்பட்டது. நாங்கள், கோதாவரி ஆற்றில் நீர் இறைக்க, குழாய்கள் பதிக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டோம்.கோதாவரி ஆற்றுப்படுகையில், ஒவ்வொன்றும், 3.2 மீ., விட்டம் தடிமன் கொண்ட, 24 இரும்பு குழாய் பாதைகள் பதிக்கப்படும். இந்த பதிப்பு, ஆற்றின் கரையை தாண்டியவுடன், தலா, இரண்டு குழாய் பாதைகள், ஒரு குழாய் பாதையாக மாற்றப்பட்டு, மொத்தம், 12 குழாய் பாதைகளாக, பூமிக்கடியில் செல்லும் வகையில் பதிக்கப்படும். 3.9 கி.மீ., துாரம் பூமிக்கடியில் கொண்டு செல்லப்பட்டு, பின், போலாவரம் கால்வாயில் இணைக்கப்படும்.

முதற்கட்டமாக, ஒரு குழாய் மட்டும், 100 சதவீதம் நிறைவு பெற்று, 16ம் தேதி முதல், கோதாவரி ஆற்றில் இருந்து, மோட்டார் மூலம் தண்ணீர் இறைக்கப்பட்டு, போலாவரம் கால்வாய்க்கு கொண்டு

செல்லப்படுகிறது.இன்னும், மூன்று மாதங்களுக்குள் அனைத்து குழாய்களும் பதிக்கப்பட்டு, முழு அளவில் தண்ணீர் இறைத்து, போலாவரம் கால்வாயில் தண்ணீர் கொண்டு செல்லப்படும்.இவ்வாறு அவர் கூறினார்.

## தற்போதைய நிலை:

மீதமுள்ள பணிகள் அனைத்தும், இன்னும் மூன்று மாதங்களுக்குள் நிறைவு பெற்றுவிடும். முதற்கட்டமாக வினாடிக்கு, 8500 கனஅடி வீதம் தண்ணீர் இறைக்கப்பட்டு, போலாவரம் கால்வாய் மூலம், கிருஷ்ணா நதிக்கு கொண்டு செல்லப்படும்.இதன்மூலம், கிருஷ்ணா, மேற்கு கோதாவரி மாநிலங்களில் உள்ள, 13 லட்சம் ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறும்.மேலும், 34 கி.மீ., துாரத்திற்கு நிலம் கையகப்படுத்த, மாநில அரசு, 700 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. அதிகாரிகள் மற்றும் அமைச்சர்கள், விவசாயிகளை நேரில் சந்தித்து, திட்டத்தின் பயனை எடுத்துக் கூறி, இரண்டு மாதங்களிலேயே அவர்களுக்கு இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டது. இதனால், திட்டம் முழு அளவில் நிறைவு பெற்றது குறிப்பிடத்தக்கது.**பட்டிசீமா திட்டம் ஆறு மாதங்களில் நிறைவு பெற்றது எப்படி?**'நான்கு ஆண்டுகளில் நிறைவேற வேண்டிய திட்டம், ஆறு மாதங்களில் நிறைவு பெற்றது எப்படி?' என்ற கேள்விக்கு, திட்டத்தை செயல்படுத்தி வரும், மெகா இன்ஜினியரிங் மற்றும் இன்ப்ராஸ்டிரக்சர் லிட்., நிறுவன அதிகாரி ஒருவர் கூறியதாவது:ஓராண்டில் திட்ட பணிகளை முடிக்க வேண்டும் என, மாநில அரசு எங்களுக்கு உத்தரவிட்டது. நான்கு ஆண்டுகளில் நிறைவு பெற வேண்டிய பணியை, ஓராண்டிற்குள் முடிப்பது என்ற சவாலுடன், பணியில் இறங்கினோம்.இந்தாண்டு, மார்ச் 23ல், பட்டிசீமா திட்டப் பணிகள் துவங்கின. முதல் இரண்டு மாதங்களில், திட்டத்திற்கான ஆயத்த பணிகளில் இறங்கினோம். முதலில், இரும்பு குழாய்கள் தயாரிக்க,

பட்டிசீமா அருகில், நான்கு தொழிற்சாலைகளை அமைத்தோம். எங்களுடன் இணைந்து தொழில்புரியும் மோட்டார் நிறுவனங்களிடம், நீர் இறைக்கும் ராட்சத மோட்டார்களுக்கு, 'ஆர்டர்' செய்தோம்; இதற்கே இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. அதன்பின், கோதாவரி ஆற்றுப்படுகையில், நீர் இறைக்க தேர்ந்தெடுத்த இடத்தில், ஆற்றின் கரையோரம் சமதளப்படுத்தினோம்.

## 'டயாப்ரம் வால்' தொழில்நுட்பம்:

மாநிலத்தில் முதன்முறையாக, ஆற்றின் கரையோரம், கான்கிரீட் தளம் அமைத்து, அதன் மீது சுவர் எழுப்பினோம்; அது, கடலுக்கான தடுப்புச் சுவர் போல அமைந்தது. இந்த தொழில்நுட்பத்திற்கு, 'டயாப்ரம் சுவர்' என்று பெயர். அந்தச் சுவரைத் துளைத்து, கிட்டத்தட்ட, 2.5 மீ., விட்டமும், 18 மி.மீ., தடிமனும் கொண்ட, 24 குழாய்கள் பொருத்தப்பட உள்ளன. ஆற்றின் பக்கம் நீளும் குழாய்களின் முனையை, ஆற்றின் தரைதளம் வரை தொங்கவிட்டு, குழாயின் மறுபுறம், கரைக்கு வெளியே, பூமிக்கடியில், 3.9 கி.மீ., பயணிக்கும் வகையில் வடிவமைக்கப்பட உள்ளது.இந்த குழாய்கள் கரையோரத்தைத் தாண்டியதும், 12 குழாய்களாகக் குறைக்கப்பட்டு, போலாவரம் வரை, வளைந்து நீண்டு செல்லும்.ஆக., 15ம் தேதி, ஒரே ஒரு குழாய் பாதை மட்டும், வெள்ளோட்டம் பார்க்கப்பட்டது. தொடர்ந்து, கடந்த 16ம் தேதி, முதல்வர் சந்திரபாபு நாயுடு, திட்டத்தை துவக்கி வைத்தார்.**மின் தேவைக்காக தனி துணைமின் நிலையம்:** பட்டிசீமா திட்டத்திற்காக, கோதாவரி ஆற்றில் ராட்சத மோட்டார் பயன்படுத்துவதற்கு தேவையான மின்சாரத்தை பெற, தற்காலிகமாக, 33 கி.வாட் துணைமின் நிலையம் அமைக்கப்பட்டு உள்ளது.நிரந்தரமாக துணைமின் நிலையம் அமைக்கும் பணி, 1.3 கோடி ரூபாய் மதிப்பில் நடந்து வருகிறது. இதற்காக, மேற்கு கோதாவரி மாவட்டம், பல்லண்ட்லா

கிராமத்தில் இருந்து, பட்டிசீமா வரை, 30 கி.மீ., துாரத்தில் உயர்மின் கோபுரங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. மின்நிலையம் அமைய உள்ள இடத்தில், பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இரு மாதங்களுக்குள், இப்பணிகள் அனைத்தும் நிறைவு பெற்று, நிரந்தர துணைமின் நிலையம் செயல்படும்.'டயாப்ரம்' என்பது மனித உடலில், நெஞ்சுக்கும், வயிற்றுக்கும் இடையேயான மெல்லிய சவ்வு. மூச்சு விடும்போது, இதன் சுருங்கி, விரியும் தன்மையால், நுரையீரல், இதய செயல்பாடு எளிதாகிறது.அதுபோல், ஆற்றினுள் செல்லும் குழாய்களை, இந்த, 'டயாப்ரம்' சுவர் தாங்கி நிற்கிறது.

## சிறு தானிய உணவு தயாரிப்பு: மத்திய அரசு 5 நாள் பயிற்சி

சென்னை: சென்னையில் உள்ள, மத்திய அரசின், குறு, சிறு, நடுத்தர தொழில்கள் வளர்ச்சி நிலையம், அக்., 5ம் தேதி, சிறு தானிய உணவு, வீட்டு உபயோகப் பொருட்கள் தயாரிப்பு பயிற்சியை, கிண்டியில் உள்ள தங்கள் மையத்தில் துவக்குகிறது. ஐந்து நாட்கள் நடக்கும் இப்பயிற்சியில், தினை லட்டு, இனிப்பு பணியாரம், தோசை மிக்ஸ், வரகு புளியோதரை, சாமை முறுக்கு, சிறு தானிய சத்து மாவு, பாயச மிக்ஸ் வகைகள், வாஷிங் பவுடர், சோப்பு ஆயில், சொட்டு நீலம், ஷாம்பு உள்ளிட்ட வீட்டு உபயோகப் பொருட்கள் தயாரிப்பு குறித்து, பயிற்சி அளிக்கப்பட உள்ளது.அத்துடன், தொழில் துவங்க ஆலோசனை கள், திட்ட அறிக்கை தயாரித்தல், வங்கி கடன் வாய்ப்புகள், தரக்கட்டுப்பாடு விவரம், விற்பனை வாய்ப்புகள் குறித்து விவரங்களும் கிடைக்கும். மேலும் விவரங்களுக்கு, உதவி இயக்குனர் சிவலிங்கத்தை, 99403 18891 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என,அறிவிக்கப்பட்டுள்ளது.

**வருண பகவான் கருணையால்அணைகளில் நீர்மட்டம் உயர்வு**

மதுரை,: மதுரை, திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் தொடர்ந்து பெய்து வரும் மழையால், அணைகளில் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்து வருகிறது. அதிகபட்சமாக மதுரை விரகனுாரில் 57 மி.மீ., மழை பதிவானது.

சில மாதங்களாக நிலவிய கோடை வெப்பத்தை தணிக்கும் வகையில் பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. இதனால் இதமான சூழ்நிலை நிலவுவதுடன், அணைகளில் நீர் மட்டம் கணிசமாக உயர்ந்து வருகிறது. விவசாயத்திற்கு தேவையான தண்ணீர் கிடைத்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். மாவட்டங்களில் பெய்த மழையளவு வருமாறு( மி.மீ.,):

மதுரை 0உ, மேலுார் 4.02, கள்ளந்திரி08, இடையபட்டி 09.08, தனியாமங்கலம் 27, சிட்டம்பட்டி 33.07, விரகனுார் 57, ஆண்டிபட்டி 07, கூடலுார் 03.06 சண்முகாநதி 10, மஞ்சலாறு 14, சோத்துப்பாறை 10, மருதாநதி 09.02, சிட்டம்பட்டி 33.07, புலிப்பட்டி 03.04, உத்தமபாளையம் 23.05, தேக்கடி 21.08, பெரியாறு 07.06 வீரபாண்டி 02, கொடைக்கானல் 40.

அணைகளுக்கு நீர் வரத்து:பெரியாறு அணை நீர் மட்டம் 115.30 அடி. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 704 கன அடி. வெளிியேற்றம் 700 கன அடி. வைகை அணை நீர் மட்டம் 45.08 அடி. அணைக்கு நீர்வரத்து அஅஎ. வெளிியேற்றம் 60. சோத்துப்பாறைக்கு வரத்து 15. வெளிியேற்றம் 03. மருதாநதிக்கு வரத்து46 வெளிியேற்றம் இல்லை. மஞ்சலாறுக்கு வரத்து 66. வெளிியேற்றம் இல்லை. மழையால் வைகை அணையில் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. தேவையான நேரத்தில் விவசாயிகளின் நலன் கருதி தண்ணீர் திறக்கப்படும் என பொதுப்பணித் துறை பொறியாளர் தெரிவித்தார்.

தேவிபட்டினத்தில் நிறமாறும் கடல்



ராமநாதபுரம்: ராமநாதபுரம் மாவட்டம் தேவிபட்டினத்தில் நவபாஷாணத்தை சுற்றிலும் கழிவுநீர் தேங்கிஉள்ளதால் கடல் கருப்புநிறமாக மாறியுள்ளது.ராமன் சீதையை மீட்பதற்கு முன், தேவிபட்டினம் நவபாஷாணத்தை வழிப்பட்டு சென்றதால், வெற்றி கிடைத்ததாக கூறப்படுகிறது. நவபாஷாணத்திற்கு வந்து சென்றால் திருமண தடை நீங்குதல், குழந்தை பாக்கியம், ஆயுள், செல்வம், கல்வி போன்ற பலன்கள் கிடைப்பதாக கருதப்படுகிறது. மேலும் முன்னோர்களுக்கு தர்ப்பணம், பில்லி, சூனியம் போன்றவற்றிற்கான பரிகார பூஜைகளும் நடக்கின்றன. இதனால் தமிழகம் மட்டுமின்றி, வெளிமாநிலம், வெளிநாட்டு பக்தர்களும் வழிபட்டு செல்கின்றனர். ராமேஸ்வரம் வரும் பக்தர்களில் பெரும்பாலானோர் நவபாஷாணத்துக்கு வருகின்றனர்.சில ஆண்டுகளுக்கு முன் பக்தர்கள் கடலில் இறங்கி நவபாஷாணத்திற்கு செல்ல வேண்டும். தற்போது நவபாஷாணத்தை சுற்றிலும் நடைமேடையும், கடல்நீர் சென்றுவர துளைகளும் உள்ளன. துளைகள் கழிவுகளால் அடைப்பட்டுவிட்டன. இதனால் கழிவுகள் வெளியேறாமல் அப்படியே தேங்கியுள்ளன. துர்நாற்றம் வீசுவதால் பக்தர்கள் அவதிப்படுகின்றனர்.பக்தர்கள் கூறியதாவது:

நவபாஷாணத்தை சுற்றிலும் கழிவுநீராக இருப்பதால், குளிப்பதற்கு சிரமமாக உள்ளது. துர்நாற்றம் வீசுகிறது. கழிவுநீர் வெளியேறி கடல்நீர் உள்ளே வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றனர்.

**நீர் கொட்டும் சுருளி அருவி**



தேனி,:தேனி மாவட்டத்தில் கடந்த 3 நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. சுற்றுலா பகுதியான ஹைவேவிஸ் மலையில் ஹைவேவிஸ், மணலாறு,வெள்ளியாறு, தூவானம், இரவங்கலார் ஆகிய 5 சிறிய அணைகள் உள்ளன. இப்பகுதியில் பெய்து வரும் மழையால் வறண்டு கிடந்த 5அணைகளும் நிரம்பி விட்டன.ஹைவேவிஸ் அணைகளில் நிரம்பி வழியும் நீர், அங்கிருந்து சுருளி அருவியை வந்தடையும் வகையில் மலையை குடைந்து சுரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது அணைகள் நிரம்பி உள்ளதால், இந்த சுரங்கப்பாதை வழியாக சுருளிக்கு நீர்வரத்து ஏற்பட்டு, சுருளி அருவியில் நீர் கொட்டுகிறது. இதனால், ஹைவேவிஸ் மலைக்கும், சுருளி அருவிக்கும் சுற்றுலா பயணிகள் வரத்து அதிகரித்துள்ளது.

**கன்னியாகுமரி மற்றும் சுற்றுவட்டாரப்பகுதியில் கனமழை**

கன்னியாகுமரி : கன்னியாகுமரியில் நள்ளிரவு முதல் கனமழை பெய்து வருவதால், அப்பகுதி மக்கள் மகிழ்ச்சியில் உள்ளனர். கீரிப்பாறை, மணலோடை, காளிகேசத்தில் ரப்பர் பால் வெட்டும் பணி பாதிப்படைந்தது. சிற்றாறு-8 செ.மீ., பேச்சிப்பாறை, மாம்பழத்துறை ஆறு-6 செ.மீ., மழை பதிவாகியுள்ளது.

**மேட்டூர் அணையிலிருந்து நீர்திறப்பு குறைப்பு**

மேட்டூர் : மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக திறக்கப்படும் நீரின் அளவு 13 ஆயிரம் கனஅடியிலிருந்து 10 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டது . மேட்டூர் அணைக்கு 22,444 நீர்வரத்து 19,195கனஅடியாகவும், மேட்டூர் அணையின் நீர்மட்டம் 70.40 அடியாகவும், நீர் இருப்பு 33.04 டி.எம்.சி.,யாகவும் உள்ளது. அணையிலிருந்து கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்திற்காக 600 கனஅடி நீர் திறக்கப்படுகிறது.

**நீண்ட இடைவெளிக்கு பிறகு மழை**

பொள்ளாச்சி:ஒரு மாதத்திற்கு பின், பொள்ளாச்சி மற்றும் சுற்றுப்பகுதிகளில் நேற்று மழை பெய்தது. இதனால், விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். பொள்ளாச்சி மற்றும் சுற்றுப்பகுதிகளில், விவசாயம் முக்கியத்தொழிலாக உள்ளது. இப்பகுதிகளில், தென்னை மற்றும் மா உள்ளிட்ட பல்வேறு பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

மற்ற பயிர்களை விட தென்னை சாகுபடி அதிகளவு உள்ளது. போதுமான நீர் வசதி கிடைத்து வந்ததால், சாகுபடி செய்யப்படும் பயிர்கள் மற்ற பகுதிக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

கடந்தாண்டை போல, இந்தாண்டும் பருவமழை கைகொடுத்து அணைகள் நிரம்பும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், மழை

பெய்யாததால், அணைகள் நீர்மட்டம் உயர்வது கேள்விக்குறியானதால், விவசாயிகள் கவலை அடைந்தனர்.

மேலும், கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக சுட்டெரிக்கும் வெயிலும் கொளுத்தி வந்ததால், பலரும் அவதிப்பட்டனர். வருண பகவானின் கருணை பார்வை பட்டு, மழை பொழியுமா என எதிர்பார்ப்புடன் விவசாயிகள் காத்திருந்தனர்.

ஒரு மாதத்திற்கு பின், நேற்று திடீரென பொள்ளாச்சி பகுதியில் மழை பொழியத்துவங்கியது. லேசான சாரல் மழையாக துவங்கிய மழை, இடைவிடாமல் தொடர்ந்து பெய்தது. சுட்டெரிக்கும் வெயிலின் தாக்கத்தினால் அவதிப்பட்டு வந்த மக்கள், மழை பெய்ததால் மகிழ்ச்சியடைந்தனர்.

ரோட்டில் வெள்ளம்

பொள்ளாச்சி பகுதியில் பெய்த மழையால் ரோட்டில், வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. மழைநீருடன், கழிவுநீரும் சேர்ந்து தேர்நிலையம் உள்ளிட்ட நகரப்பகுதியில் உள்ள முக்கிய ரோடுகளில் வெள்ளமாக நீர் ஓடியது. இதனால், இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

தட்டி எடுத்தது மழை

கிணத்துக்கடவில் நேற்று உழவு மழை பெய்ததால், வெப்பம் தணிந்து குளிர்ந்து காணப்பட்டது.

கிணத்துக்கடவு பகுதியில் கடந்த மே மாதம் மழை பெய்தது. அதை தொடர்ந்து பெய்யவில்லை. வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. வெப்பத்தை தாக்குப்பிடிக்க முடியாமல் பொதுமக்கள் அவதிப்பட்டனர்.

இரண்டு நாட்களாக மழை வருவதுபோல், மேகம் சூழ்ந்தது. ஆனால், வராமல் ஏமாற்றி வந்தது.

நேற்று பிற்பகல், 3:40 முதல் மாலை, 5:00 மணி வரை இடி, மின்னல், காற்று இல்லாமல் நிதானமாக மழை பெய்தது. இதன் காரணமாக வெப்பம் குறைந்து குளிர்ந்து காணப்பட்டது.

மழை தொடர்ந்து பெய்ய வேண்டும் என விவசாயிகளும், பொதுமக்களும் எதிர்பார்க்கின்றனர்.

**காண்டூர் கால்வாய் வழியாக தண்ணீர் வந்தாச்சு!திருமூர்த்தியில், பாசனத்திற்கு இருப்பு**

உடுமலை:பி.ஏ.பி., நான்காம் மண்டல பாசனத்திற்கு, தொகுப்பு அணைகளிலிருந்து, காண்டூர் கால்வாய் வழியாக தண்ணீர் பெறப்பட்டு, இருப்பு செய்யும் பணிகள் துவங்கியுள்ளன. தண்ணீர் திறப்பிற்கு முன், பரவலாக மழை பெய்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

பி.ஏ.பி., நான்காம் மண்டல பாசனத்தில், உடுமலை கால்வாய் மூலம், 14,612, கோமங்கலம், 978, புதுப்பாளையம் கிளை வாய்க்கால், 7,319 ஏக்கர் பாசன வசதி பெறுகின்றன.

மேலும், கோவை, திருப்பூர் மாவட்டங்களில், 95 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான பரப்பு, இம்மண்டல பாசனத்தில், பாசன வசதி பெறுகின்றன. வழக்கமாக, ஆக., மாதத்தில், திருமூர்த்தி அணையிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டு, வடகிழக்கு பருவமழை உதவியுடன், சாகுபடி பணிகள் மேற்கொள்ளப்படும்.

இந்தாண்டு, தொகுப்பு அணைகளிலிருந்து, திருமூர்த்தி அணைக்கு, தண்ணீர் எடுக்கப்படும், காண்டூர் கால்வாய் புதுப்பிப்பு பணிகள், குறித்த நேரத்தில், முடிக்கப்படவில்லை.இதனால், நான்காம் மண்டல பாசனத்திற்கு, தண்ணீர் திறப்பதில் காலதாமதம் ஏற்பட்டது. பல கட்ட

இழுபறிக்கு பிறகு, நேற்றுமுன்தினம், சர்க்கார்பதி மின் உற்பத்தி நிலையம் வழியாக, தொகுப்பு அணைகளிலிருந்து, காண்டூர் கால்வாயில், தண்ணீர் திறக்கப்பட்டது.

நேற்றைய காலை நிலவரப்படி, திருமூர்த்தி அணைக்கு, காண்டூர் கால்வாய் வழியாக, வினாடிக்கு, 242 கன அடி தண்ணீர் வரத்து உள்ளது. படிப்படியாக, கால்வாயில், தண்ணீர் திறப்பு அதிகரிக்கப்படும்.அணை நீர் மட்டம், 60 அடியில், 20.15 அடியாக இருந்தது. தொகுப்பு அணைகளிலிருந்து, இருப்பு செய்யப்பட்டு, அக்., 12 ல், பாசனத்திற்கு, அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படும் என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**வணக்கம் 'செவ்வாய்'**



பூமியை விட்டால் வேறு இடம் இல்லாமல் தவித்த மனிதர்களை வரவேற்க, இப்போது செவ்வாய் கிரகம் தயாராக இருக்கிறது. இங்கு தண்ணீர் இருப்பதை 'நாசா' உறுதி செய்துள்ள நிலையில், நாம் செவ்வாயில் குடியேறும் நாள் வெகுதூரத்தில் இல்லை.

சூரிய குடும்பத்தில் உள்ள சிவப்பு கோளான செவ்வாய் கிரகம் குறித்த ஆராய்ச்சியில் பல நாடுகள் ஈடுபட்டுள்ளன. சில நாடுகள் செவ்வாய்க்கு விண்கலத்தை அனுப்பி உள்ளன. இந்தியா சார்பில் 'மங்கள்யான்' அனுப்பப்பட்டுள்ளது. அமெரிக்க விண்வெளி அமைப்பான 'நாசா', செவ்வாய் கிரகம் குறித்து தொடர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது. கடந்த 2006ல் 'மார்ஸ் ரெகோனாய்சன்ஸ் ஆர்பிட்டர்' (எம்.ஆர்.ஓ.,) என்ற விண்கலம் ஏவப்பட்டது. இதில் பொருத்தப்பட்ட 'இமேஜிங் ஸ்பெக்டோ மீட்டர்' எடுத்த புகைப்படத்தில் நீர் ஓடுவதற்கான ஆதாரம் கிடைத்து உள்ளது. 'செவ்வாயில் நீர் தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கிறது' என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

**கோமுகி அணையில் உபரி நீர் வெளியேற்றம்**

கச்சிராயபாளையம் : கோமுகி அணையில் 50 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

கச்சிராயபாளையம் அடுத்த கோமுகி அணை கல்வராயன் மலையில் அடிவாரத்தில் உள்ளது. கல்வராயன் மலை மற்றும் கச்சிராயபாளையம் சுற்றியுள்ள பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு பலத்த இடியுடன் கூடிய கன மழை பெய்தது.இதனால் கல்வராயன் மலையில் உற்பத்தி ஆகும் கல்படை, பொட்டியம் மற்றும் பரங்கிநத்தம் ஆகிய 3 ஆறுகளின் வழியாக அணைக்கு வினாடிக்கு 1000 கன அடி நீர் வரத்து உள்ளது. அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளதால் 2 நாட்களில் அணையின் நீர்மட்டம் 8 அடி உயர்ந்துள்ளது.தற்போது அணையில் முழு கொள்ளவான 561 மில்லியன் கன அடியில்(46 அடி) 400 மில்லியன் கன அடி(40 அடி) நீர்மட்டம் உயர்ந்துள்ளது. அணையின் பாதுகாப்பு காரணமாக, நேற்று

காலை முதல் வினாடிக்கு 50 கன அடி நீர், கோமுகி ஆற்றில் வெளியேற்றப்படுகிறது. கோமுகி அணை பகுதியில் நேற்று முன்தினம் இரவு 1,14 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

**இடியுடன் கூடிய மழை விவசாயிகள் மகிழ்ச்சி**

சின்னசேலம் : சின்னசேலத்தில் பலத்த மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

சின்னசேலம் தாலுகாவில் கடந்த சில மாதங்களாக பருவ மழை பெய்யாமல் பொய்த்தது. இதனால் நகரப் பகுதிகளில் குடிதண்ணீருக்கும் மற்றும் கிராம பகுதிகளில் விவசாயம் செய்ய முடியாமலும் சிரமபட்டு வந்தனர்.இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு 9 :00 மணிக்கு துவங்கி, இடியுடன் கூடிய மழை பெய்தது. பலத்த மழையினால் ஒரு சில இடங்களில் மரங்கள் சாய்ந்தும், வயல் பகுதிகளில் தண்ணீர் தேங்கியது. மானவாரியான பருத்தி, மக்காசோளம், மணிலா உள்ளிட்ட பயிர்களுக்கு மிகுந்த பயனாக இருந்தது.இதனால் ஒரு சில கிராமங்களில் பயிர் செய்த நெற்பயிர்களை மழையினால் அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் மிகவும் சிரமபட்டனர்.பலத்த மழை பெய்ததால், நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டாலும், மானவாரி பயிருக்கு பயனுள்ளதாக இருந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

**கால்நடை பசுந்தீவனம் உற்பத்தி: முருக்கேரியில் கலெக்டர் ஆய்வு**

முருக்கேரி : முருக்கேரி அருகே மேய்கால் புறம்போக்கு நிலங்களில் கால்நடை பசுந்தீவனம் உற்பத்தி செய்யும் பணியினை, கலெக்டர் லட்சுமி ஆய்வு செய்தார்.

மரக்காணம் ஒன்றியத்திற்கு உட்பட்ட நாகல்பாக்கம், பந்தாடு ஆகிய கிராமங்களில் உள்ள அரசுக்கு சொந்தமான புறம் போக்கு நிலங்கள் உள்ளது. இங்கு, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்

கழகம் சார்பில், கால்நடைகளுக்கு பசுந்தீவனம் உற்பத்தி செய்து வருகின்றனர்.மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், இந்த பகுதியில் நில மேம்பாட்டு பணிகள், சாலை மேம்பாடு, பண் ணைக் குட்டை அமைத்தல் மற்றும் வேலி அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.இந்த பணிகளை கலெக்டர் லட்சுமி நேரில் சென்று, நேற்று ஆய்வு மேற்கொண்டார். மரக் காணம் ஒன்றிய சேர்மன் விஜயாஅர்ச்சுணன், மாவட்ட மண்டல இணை இயக்குநர் டாக்டர் தங்கராசு, உதவி இயக் குநர்கள் டாக்டர் மகேந்திரன், குரு வையா, பேராசிரியர் வேங்கடபதி, கால்நடை மருத்துவர்கள் ராஜேந் திரன், மோகன், மணிகண்டன், சித்ராம்பிகை, வருவாய் ஆய்வா ளர் ரமேஷ், வி.ஏ.ஓ., க்கள் கலையர சன், சுரேஷ், ஊராட்சி தலைவர் சிவபிரகாசம் உடனிருந்தனர்.

## தமிழகத்தில் சிறிய, பெரிய வெங்காயம் விலை கிடுகிடு: லாரி ஸ்டிரைக் துவங்கினால் மேலும் உயர வாய்ப்பு

சேலம்: தமிழகத்தில் பெய்து வரும் மழை காரணமாக, சிறிய வெங்காய அறுவடையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதை அடுத்து விலை, கிலோவுக்கு, 12 ரூபாய் முதல், 14 ரூபாய் வரை, அதிகரித்துள்ளது. இதன் காரணமாக பெரிய வெங்காயம் விலை, கிலோவுக்கு, ஐந்து ரூபாய் முதல், எட்டு ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

தமிழகத்தில், சின்ன வெங்காயம், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, சேலம், மதுரை, விருதுநகர், தர்மபுரி, திருச்சி, கரூர் மாவட்டங்களில் அதிக அளவில் விலைகிறது. இந்த மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழையால், சின்ன வெங்காயம் அறுவடையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கர்நாடகா மாநிலம் மைசூர் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து தமிழகத்துக்கு விற்பனைக்கு வந்து கொண்டு இருந்த சின்ன வெங்காயத்தின் வரத்தும் சரிந்துள்ளதால், விலை கிலோவுக்கு, 15 ரூபாய்

வரை, உயர்ந்துள்ளது. சின்ன வெங்காயம் விலை உயர்வை தொடர்ந்து, பெரிய வெங்காயம் விலை, கிலோவுக்கு, ஐந்து ரூபாய் வரை, உயர்ந்துள்ளது.

சேலம் வெங்காய வியாபாரி கதிரேசன் கூறியதாவது: லாரி ஸ்டிரைக் துவங்குவதால், கர்நாடகா, ஆந்திராவில் இருந்து விற்பனைக்கு வரும் சின்ன வெங்காயம் வரத்தும், மஹாராஷ்டிரா உள்ளிட்ட வடமாநிலங்களில் இருந்து வரும் பெரிய வெங்காயம் வரத்தும் சரிய வாய்ப்புள்ளதால், வெங்காயம் விலை, மேலும் உயர வாய்ப்புள்ளது. இவ்வாறு, அவர் கூறினார்.

## நாமகிரிப்பேட்டையில் ரூ.43லட்சத்திற்கு மஞ்சள் ஏலம்

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டை, வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று நடந்த மஞ்சள் ஏலத்தில், 955 மூட்டை, 43 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில், நேற்று மஞ்சள் ஏலம் நடந்தது. ஏலத்தில், தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா, சேலம், ஆத்தூர், தலைவாசல் மற்றும் சுற்று வட்டாரத்தை சேர்ந்த மஞ்சள் விவசாயிகள் கலந்து கொண்டனர். இதில், தலா, 65 கிலோ கொண்ட, 955 மூட்டை ஏலத்தில் வைக்கப்பட்டது. இதில், விரலி ரகம் அதிகபட்சமாக 8,859 ரூபாய், குறைந்தபட்சமாக 7,099 ரூபாய், உருண்டை ரகம் அதிகபட்சமாக 7,909 ரூபாய், குறைந்த பட்சமாக 6,459 ரூபாய், பனங்காலி அதிகபட்சமாக 13,000 ரூபாய், குறைந்தபட்சமாக 8,800 ரூபாய்க்கு ஏலம் போனது. மொத்தம், 43 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் வர்த்தகம் நடந்தது. ஆத்தூர், ஈரோடு, சேலம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டு, மஞ்சளை வாங்கிச் சென்றனர்.

## விவசாய நிலங்களில் மழை நீர் புகுந்தது: 50 ஏக்கர் கரும்பு, வாழை பயிர் பாதிப்பு

திருச்செங்கோடு: திருச்செங்கோட்டில், விவசாய நிலங்களில் மழைநீர் புகுந்ததால், 50 ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்டிருந்த கரும்பு, வாழை, கடலை பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளது.

திருச்செங்கோடு சுற்று வட்டார பகுதியில், கடந்த மூன்று நாட்களாக இரவில் கன மழை பெய்து வருகிறது. மழையில், அதிகபட்சமாக, 85 மில்லி மீட்டர், மழை பதிவாகி உள்ளது. இந்நிலையில் சானார்பாளையம், கூட்டப்பள்ளி, அய்யகவுண்டம்பாளையம், அணிமூர், கொல்லபட்டி, பாலிக்காடு, குப்பிச்சிபாளையம், பொட்டிலிபாளையம், ஆண்டிபாளையம் உள்ளிட்ட பகுதிகளில், 50 ஏக்கரில் கரும்பு, வாழை, கடலை பயிரிடப்பட்டுள்ள வயல்களில் தண்ணீர் புகுந்து தேங்கி உள்ளதால், இந்த பயிர்கள் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. விவசாய கிணறுகளில் தண்ணீர் நிரம்பி வழிவதால், கிணற்றில் இருந்து வெளியேறிய மீன்கள் விவசாய நிலங்களில் செத்து கிடக்கின்றன. பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை வி.ஏ.ஓ., மணிவண்ணன், ஆர்.ஐ., மாதேஸ்வரன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

திருச்செங்கோடு: திருச்செங்கோட்டில், விவசாய நிலங்களில் மழைநீர் புகுந்ததால், 50 ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்டிருந்த கரும்பு, வாழை, கடலை பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளது.

திருச்செங்கோடு சுற்று வட்டார பகுதியில், கடந்த மூன்று நாட்களாக இரவில் கன மழை பெய்து வருகிறது. மழையில், அதிகபட்சமாக, 85 மில்லி மீட்டர், மழை பதிவாகி உள்ளது. இந்நிலையில் சானார்பாளையம், கூட்டப்பள்ளி, அய்யகவுண்டம்பாளையம், அணிமூர், கொல்லபட்டி,

பாலிக்காடு, குப்பிச்சிபாளையம், பொட்டிலிபாளையம், ஆண்டிபாளையம் உள்ளிட்ட பகுதிகளில், 50 ஏக்கரில் கரும்பு, வாழை, கடலை பயிரிடப்பட்டுள்ள வயல்களில் தண்ணீர் புகுந்து தேங்கி உள்ளதால், இந்த பயிர்கள் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. விவசாய கிணறுகளில் தண்ணீர் நிரம்பி வழிவதால், கிணற்றில் இருந்து வெளியேறிய மீன்கள் விவசாய நிலங்களில் செத்து கிடக்கின்றன. பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை வி.ஏ.ஓ., மணிவண்ணன், ஆர்.ஐ., மாதேஸ்வரன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

## தர்மபுரி மாவட்டத்தில் கன மழை: அணைகளுக்கு நீர் வரத்து அதிகரிப்பு

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக, மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர் மட்டம் உயர்ந்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டத்தில், தென்மேற்கு பருவமழை ஏமாற்றியதால், விவசாயிகள் பொதுமக்கள் ஏமாற்றம் அடைந்தனர். மேலும், மாவட்டத்தில் உள்ள ஏரி, குளங்கள் மற்றும் அணைகளின் நீர் மட்டம் கேள்வி குறியானதால், இவற்றின் மூலம் பாசனம் பெற்று வந்த, பல ஆயிரம் ஏக்கரில் சாகுபடி கேள்விக்குறியானது. இந்நிலையில், தர்மபுரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த சில நாட்களாக, தொடர்ந்து மழை பெய்து வருவதால், மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான, ஏரி, குளம் மற்றும் அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். குறிப்பாக, 65.27 அடி கொள்ளளவு கொண்ட வாணியாறு அணையில், நேற்று காலை நிலவரப்படி, 18.37 அடியும், 50 அடி கொள்ளளவு கொண்ட சின்னாற்றில், 19.15 அடியும், 50.18 அடி கொள்ளளவு கொண்ட தொப்பையாறு அணையில், 1.97 அடியும், 24.60 அடி கொள்ளளவு கொண்ட நாகவதி அணையில், 2.55 அடி நீரும் உள்ளது. 17.35 அடி

கொள்ளளவு கொண்ட ஈச்சம்பாடி அணையில், முழு கொள்ளளவு தண்ணீரும், 34.45 அடி கொள்ளளவு கொண்ட வரட்டாறு அணைக்கட்டில், 16.09 அடி தண்ணீரும் உள்ளது. வடகிழக்கு பருவ மழை மேலும் தொடர வாய்ப்புள்ளதால், அணைகளுக்கு, மேலும், தண்ணீர் வரத்து அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை. தர்மபுரியில் நேற்று, 15 மி.மீ., கலெக்டர் அலுவலகத்தில், 10 மி.மீ., அரூர், 8 மி.மீ., பாப்பிரெட்டிப்பட்டி, 7.40 மி.மீ., மாரண்டஹள்ளி, 7 மி.மீ., பாலக்கோடு, 3 மி.மீ., ஒகேனக்கல், 2.90 மி.மீ., பென்னாகரம், 2 மி.மீ., மழையளவு பதிவானது. நேற்று காலை முதல் மாவட்டத்தின், பல்வேறு பகுதிகளில் குளுமையான, சீதோஷ்ண நிலை நிலவியதுடன், சில பகுதிகளில், சாரல் மழை பெய்ததால், பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## பாக்கு மரங்களுக்கு மத்தியில்ஊடுபயிராக வாழை

பந்தலுார்:கூடலுார், பந்தலுார் பகுதிகளில் பாக்கு மரங்களுக்கு மத்தியில் ஊடுபயிராக நேந்திரன் வாழை அதிகளவில் விளைவிக்கப்படுகிறது.கூடலுார், பந்தலுார் பகுதிகளில் உள்ள சதுப்பு நிலப்பகுதிகளில் பயிரிடப்பட்டு வந்த நெல் விவசாயம் காலநிலை மாற்றத்தால் படிப்படியாக கைவிடப்பட்டு வருகிறது.இந்த நிலங்களில் தேயிலை, காபி, இஞ்சி, வாழை மற்றும் பாக்கு விளைவிப்பதில் விவசாயிகள் அதிகளவில் ஈடுபட்டுள்ளனர்.

தற்போது, நேந்திரன் வாழை விளைவிப்பதில், விவசாயிகள் அதிகளவில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக, பாக்கு மரங்களுக்கு இடையில் ஊடுபயிராக நேந்திரன் வாழை விளைவிக்கப்படுகிறது. இதனால், வாழைக்கு இடும் உரங்கள்

பாக்கு மரங்களுக்கும் கிடைக்கும் என்பதுடன்; காற்றில் வாழை சாயாமல் பாதுகாப்பதற்கும் பாக்கு மரங்கள் பயன்படுகின்றன.

**விலையில் வீழ்ந்த உருளைக்கிழங்குகிடங்குகளில் தேங்குவதால் கவலை**

கோத்தகிரி:கோத்தகிரியில் அறுவடை செய்யப்பட்ட உருளை கிழங்குக்கு, விலை இல்லாததால், விற்கப்படாமல் கிடங்குகளில் தேங்கி கிடக்கிறது.நீலகிரி மாவட்டத்தில், பசுந்தேயிலைக்கு அடுத்தப்படியாக, காய்கறி விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. நீர் ஆதாரம் உள்ள நிலங்களில் உருளைக்கிழங்கு, காரட், பீன்ஸ் மற்றும் பீட்ரூட் உள்ளிட்ட மலை காய்கறி சாகுபடி செய்யப்பட்டுள்ளது.இதில், குறிப்பாக, உருளைக்கிழங்கு விவசாயம், அதிக பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.பருவம் கடந்து பெய்துவரும் மழை, வறட்சி, வன விலங்குகளின் தொல்லை, இடுப்பொருட்களின் விலையேற்றம், கூலி உயர்வு உள்ளிட்ட பல்வேறு சவால்களை கடந்து, விவசாயிகள் உருளைக்கிழங்கு பயிரிட்டுள்ளனர்.

கோத்தகிரியை பொறுத்தமட்டில், நெடுகுளா, குண்டாடா, சுள்ளிகூடு மற்றும் கூக்கல்தொரை பகுதிகளில், உருளைக்கிழங்கு சாகுபடி அதிகம்.அறுவடைக்கு தயாரான உருளைக்கிழங்கு, மழை நீடித்தால், அழுகிவிடும் என்பதால், கடந்த இரு வாரங்களாக, விவசாயிகள் உருளை கிழங்கை அறுவடை செய்து வருகின்றனர்.தற்போது, 45 கிலோ கொண்ட ஒரு மூட்டைக்கு, மேட்டுப்பாளையம் மண்டிகளில், 700 ரூபாய் முதல், 850 ரூபாய்வரை மட்டுமே, விலை கிடைக்கிறது.

மண்டி கமிஷன், லாரி வாடகை, ஏற்றி இறக்க கூலி என, கணக்கிட்டால், ஒரு மூட்டைக்கு, 200 ரூபாய் முதல், 250 ரூபாய்வரை செலவாவதால், ஒரு கிலோவுக்கு சராசரியாக, 12 ரூபாய் முதல், 15 ரூபாய் வரை மட்டுமே

விலை கிடைக்கிறது. ஆனால், கடைகளில், 24 முதல் 30 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகிறது.

விதை, உரம், பூச்சி மருந்து உட்பட இடுப்பொருட்களின் விலை உயர்வுடன், விதைத்து, அறுவடை செய்து மண்டிகளில் விற்பது வரை விவசாயிகள் கூடுதல் தொகையை செலழிக்க வேண்டியுள்ளதால், தற்போது கிடைக்கும் விலை, போதுமானதாக இல்லை; விவசாயிகளுக்கு இழப்புதான் மிஞ்சுகிறது. அதனால், விலை கிடைக்கும் வரை, அறுவடை செய்யப்பட்ட உருளை கிழங்கை விற்காமல், விவசாயிகள் தரம் பிரித்து, கிடங்குகளில் சேமித்து வருகின்றனர்.

## மாவட்டத்தில் பரவலாக மழை

சிவகாசி: சிவகாசியில் கடந்த சில நாட்களாக வெயில் அடித்து வந்தது. இந்நிலையில் நேற்று மதியம் திடீரென மேக மூட்டம் தென்பட்டன. மாலை 4 மணிக்கு மேல் 2 மணி நேரம் இடியுடன் கூடிய கன மழை பெய்தது. பல இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. ரதவீதிகள், ஜக்கம்மாள் கோயில் அருகே, பஸ் ஸ்டாண்ட், முஸ்லிம் தெருக்களில் மழை நீர் கரை புரண்டு ஓடியது. பள்ளங்களில் நீர் தேங்கின. டூவீலர் வாசிகள், பாதசாரிகள் அவதிப்பட்டனர். மாவட்டத்தில் பரவலாக மழை காணப்பட்டதால் இரவில் குளிந்த காற்று வீசியது. மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

* சத்திரப்பட்டி சுற்றுப் பகுதிகளில் பரவலாக மழைபெய்து வருகிறது. கடந்த நான்கு நாட்களுக்கு முன்பு சமுசிகாபுரம், அய்யனாபுரம், சங்கரபாண்டியபுரம் பகுதிகளிலும் நேற்று சத்திரப்பட்டி, சமுசிகாபுரம், வ.உ.சி நகர், பி.ஆர்.ஆர்.நகர் உள்ளிட்ட பகுதிகளிலும் மழை பெய்தது. மழைகாரணமாக மங்கம்மாசாலை, மெயின்ரோடுகளில் தண்ணீர் தேங்கி

நிற்பதால் இரு சக்கர வாகன ஓட்டிகள், இரவு நேரத்தில் பணிமுடிந்து செல்லும் தொழிலாளர்கள் தட்டுத்தடுமாறி செல்லும் நிலை உள்ளது. மழைக்காலம் துவக்குவதற்கு முன்பாக ஊராட்சி நிர்வாகம் இப்பகுதியில் உள்ள சாலைகள் மற்றும் வாறுகால் வசதிகளை மேம்படுத்திட வேண்டும் . திருச்சுழியில் 17.2 மி.மீ.,மழை :மாவட்டத்தில் கடந்த சிலநாட்களாக வெப்பச்சலனம் காரணமாக மழை பெய்துவருகிறது. நேற்றுகாலை 8.30 மணிப்படி மழையளவு(மி.மீ.,): அருப்புக்கோட்டை 6.5, சாத்தூர் 7, சிவகாசி 4, திருச்சுழி 17.2, ராஜபாளையம் 2.1, காரியாபட்டி 2.4, கோவிலாங்குளம் 14.4. மாலையில் விருதுநகரில் மழை பெய்தது.

## ரெட்டியார்சத்திரத்தில் மழை விவசாயிகள் மகிழ்ச்சி

ரெட்டியார்சத்திரம்: ரெட்டியார்சத்திரம் பகுதியில் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கன்னிவாடி, ஸ்ரீராமபுரம், தருமத்துப்பட்டி பகுதிகளில் சில ஆண்டுகளாக பருவமழை இல்லை. மாவட்டத்தின் பிற பகுதிகளில் சாரல் மழை இருந்தபோதும், இப்பகுதிகளில் சொற்ப மழைகூட பெய்யவில்லை. ஆடிப்பட்ட சாகுபடிக்கு மழையை எதிர்நோக்கி இருந்த விவசாயிகள் ஏமாற்றமடைந்தனர். நிலத்தடி நீர்மட்ட குறைவால், குடிநீர் வினியோகமும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியது. சில நாட்களாக உழவுப்பணிகள் மும்முரமாக நடந்தது. கசவனம்பட்டி, கோனூர், கரிசல்பட்டி, மைலாப்பூர், மாங்கரை, எம்.அம்மாபட்டி, டி.புதுப்பட்டி பகுதிகளில் பலர் மக்காச்சோளம் நடவு செய்திருந்தனர். பகலில் தொடர்ந்து அதிகரித்து வந்த வெப்பத்தால், சாகுபடி பணிகள் பாதிப்படையும் நிலை ஏற்பட்டது. கன்னிவாடி, ரெட்டியார் சத்திரம் பகுதியில் நேற்று முன்தினம் நல்ல மழை பெய்தது. இந்த மழையால் வெப்பம் தணிந்தது மட்டுமின்றி, மக்காச்சோள நட்ட விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். .

## கொடைக்கானலில் அரிய பறவைகளின் சங்கீதம்

கொடைக்கானல்: கொடைக்கானலில் ரோட்டரி சங்கம், என்.சி.பி.எஸ், வி.சி.டி. இயங்கங்களுடன் இணைந்து அரிய வகை பறவைகளின் ஒலியை கொண்டு அமைத்த இசை யின் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேற்கு தொடர்ச்சி மலையில் வாழும் அரிய வகை பறவைகளின் ஒலியினை கொண்டு, இயற்கையான பாட்டுடன் கோர்த்து இசை அமைக்கப்பட்டது. கல்லூரிமாணவர்கள், பள்ளி மாணவர்கள் சமூக ஆர்வலர்கள் உட்பட பலர் பங்கேற்றனர். பெங்களுரூவில் இருந்து வந்த இக்குழுவில் பறவைகள் ஆராய்ச்சியாளர்களான வி.வி. ராபின், பிரசன்ஜித் யாதவ் பங்கேற்றனர். நியுயார்க்கிலிருந்து வந்த இசைக்கலைஞர்கள், பறவைகள் ஆராய்ச்சியாளர் பென்மரைன் உட்படபலர் இசையை இசைத்து காட்டினார். ரோட்டரி சங்கத்தலைவர் சாந்த சதிஷ் வரவேற்றார். செயலாளர் செல்வகுமார், சாய் கீதாஞ்சலி, சுதாகர் ஜெயராஜ், சாந்த சொருபன் ஆகியோர் பறவைகள் ஒலியில் இணைந்த இசை பற்றிய விழிப்புணர்வுவை ஏற்படுத்தினர்.

### மலைப்பகுதியில் தொடர் மழை

தாண்டிக்குடி: தாண்டிக்குடி, பண்ணைக்காடு அதனைச்சுற்றியுள்ள மலைக்கிராமங்களில் தொடர் மழை பெய்து வருகிறது.கடந்த சில தினங்களாக மலைப்பகுதியில் மின்னலுடன் பலத்த மழை பெய்தது. தொடர்மழை காபி, வாழை, ஆரஞ்சு, மிளகு உள்ளிட்டவற்றிற்கு ஏற்றதாக அமைந்துள்ளது. புதிய நாற்றுக்கள் நடவுப் பணிக்கான ஆயத்தப் பணிகளை விவசாயிகள் துவங்கியுள்ளனர். நேற்று முன்தினம் இரவு விடிய, விடிய மிதமான மழை பெய்தது. தொடர்ந்து வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. தடியன்குடிசை நறுமண சுற்றுலா பகுதியில் குளிர்ந்த காற்றுடன் இதமான சூழல் நிலவுகிறது.

### சுற்றுலா தின கருத்தரங்கு

பழநி: திண்டுக்கல் மாவட்ட சுற்றுலாத்துறை, பழநியாண்டவர் கலை பண்பாட்டு கல்லூரி இணைந்து உலக சுற்றுலா தின கருத்தரங்கு நடத்தின. பழநி டி.எஸ்.பி., சண்முகசுந்தரம் தலைமைவகித்தார். முதல்வர் அன்புசெல்வி முன்னிலைவகித்தார். சுற்றுலா முகமையின் வாய்ப்புகள், சுற்றுலாவின் நூறுகோடி வாய்ப்புகள் என்ற தலைப்பில் விரிவுரையாளர் சுரேஷ், போகஸ் டூரிஸ்ட் உரிமையாளர் பிரேம்ஜி ஆகியோர் பேசினர். மாவட்ட கல்லூரிகள் அளவிலான சுற்றுலா தலங்கள் பற்றிய ஓவியம், கட்டுரை, பேச்சு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப் பட்டன. வரலாற்றுத்துறை தலைவர் இணைப்பேராசிரியர் ரவிச்சந்திரன் உட்பட பலர் பங்கேற்றனர். கொடைக்கானல் சுற்றுலா அலுவலர் குணசேகரன் நன்றி கூறினார்.

## மலைப்பகுதியில் மகசூல் காணும் மாளி மிளகாய்

தாண்டிக்குடி: தாண்டிக்குடி பன்றிமலை கீழ்மலைப்பகுதியில் மாளி மிளகாய் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டியுள்ளனர்.

வழக்கமாக உள்ள பச்சை மிளகாயை காட்டிலும் அளவில் பெரிதாகவும், காரம் அதிகமுள்ள இம்மிளகாய்க்கு கேரளாவில் மார்க்கெட் உள்ளது. நடவு செய்த மூன்று மாதத்தில் காய்த்து தொடர்ந்து இரு ஆண்டுகள் வரை பலனளிக்கிறது.

இதுகுறித்து விவசாயி ஆறுமுகசாமி கூறுகையில்: மலைத்தோட்ட பயிருக்கு மாற்றாக முழுமையாக இயற்கை பண்ணை முறையில் மாளி மிளகாய் விவசாயம் செய்து வருகிறேன். பத்து தினங்களுக்கு ஒருமுறை 1 ஏக்கரில் அரை டன் மிளகாய் கிடைக்கிறது.

விலையை பொறுத்தமட்டில் தேவைக்கு தகுந்தாற் போல் ரூ.40 முதல் 110 வரை விலை கிடைக்கிறது. வனவிலங்கு தாக்குதல் அறவே இல்லாத

நிலையில் நிம்மதியாக உள்ளது. மானாவாரியாக பயிரிட்டு நல்ல வருவாய் கிடைக்கிறது. மாளி மிளகாய் உற்பத்தியை

அதிகரிக்க தோட்டக்கலைத்துறையினர், விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி மற்றும் ஆலோசனைகளை வழங்க வேண்டும்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை

தினமணி

நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்கு நீர் திறப்பு குறைப்பு**

மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக திறக்கப்படும் நீரின் அளவு 13 ஆயிரம் கனஅடியிலிருந்து 10 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டது.

மேட்டூர் அணைக்கு 22,444 நீர்வரத்து 19,195கனஅடியாகவும், மேட்டூர் அணையின் நீர்மட்டம் 70.40 அடியாகவும், நீர் இருப்பு 33.04 டி.எம்.சி.,யாகவும் உள்ளது.

அணையிலிருந்து கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்திற்காக 600 கனஅடி நீர் திறக்கப்படுகிறது.

**பயிர்க் காப்பீடு செய்யாததால் ரூ.28 கோடி இழப்பு**

காவிரி டெல்டா பகுதியில் 32 ஆயிரம் ஏக்கர் நிலத்தை பயிர்க் காப்பீடு செய்யாததால், தமிழக அரசுக்கு ரூ.28 கோடி இழப்பு ஏற்பட்டதாக இந்திய கணக்கு, தணிக்கைத் துறைத் தலைவர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

அனைத்து மாவட்டங்களையும் (சென்னையைத் தவிர) வறட்சி பாதித்த பகுதியாக கடந்த 2013-இல் தமிழக அரசு அறிவித்தது. இதில், 50 சதவீதம் பயிரிழப்பு ஏற்பட்ட டெல்டா விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு

ரூ.15 ஆயிரம் வீதம் இழப்பீடு வழங்க அரசு உத்தரவிட்டது. அந்த வகையில், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு அளிக்கப்பட்ட ரூ.540 கோடி நிதியில், ரூ.515 கோடி விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பப்பட்டுவிட்டது. பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 11.22 லட்சம் ஏக்கர் நிலம் காப்பீடு செய்யப்பட வேண்டியிருந்தாலும், 10.89 லட்சம் ஏக்கர் நிலம் மட்டுமே காப்பீடு செய்யப்பட்டிருந்தது. இரண்டாம் பருவ நெல் பயிரிட்டிருந்த 33 ஆயிரம் ஏக்கர் வேளாண்மைத் துறையால் முழுமையான பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. இதன்காரணமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட ரூ.28.54 கோடியைத் தவிர்த்திருக்கலாம் என கூறப்பட்டுள்ளது.

## வேளாண் கல்லூரி மாணவர்களுக்குப் பயிற்சி

பெரம்பலூர் தந்தை ரோவர் வேளாண்மை கல்லூரி மாணவர்களுக்கு, ஊரக வேளாண்மை பயிற்சித் திட்டத்தில் விக்கிரவாண்டியில் களப்பயிற்சி அளிக்கப்பட்டது.

இதில், திருந்திய நெல் சாகுபடி திட்டத்தின் கீழ் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்கள், கூம்பு களையெடுக்கும் கருவியின் பயன்பாடு குறித்த செயல் விளக்கம் மற்றும் விவசாய ஆலோசனைகளை வேளாண்மை அதிகாரிகள் வழங்கினர். மேலும் இயற்கை உரம் தயாரிக்கும் முறை குறித்தும் விளக்கம் அளித்தனர்.

மதுரப்பாக்கம், ஒரத்தூர், பனையபுரம், பாப்பனப்பட்டு, ஈச்சங்குப்பம், செ.புதூர், கொட்டியாம்பூண்டி, பொன்னங்குப்பம், ரெட்டிக்குப்பம் ஆகிய கிராமங்களில் முன்னோடி விவசாயிகள் நிலத்திலும் வேளாண் துறை அதிகாரிகள் மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தனர்.

## லாக்கூரில் 138 மி.மீ. மழை

லாக்கூரில் 138 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

கடலூர் மாவட்டத்தில் வெயிலின் தாக்கம் குறையாத நிலையில், 90 பாரன்ஹீட்டுக்கும் அதிகமாகவே இருந்து வருகிறது. இந்நிலையில், திங்கள்கிழமை இரவு மற்றும் செவ்வாய்க்கிழமை அதிகாலையில் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. எனினும், செவ்வாய்க்கிழமை காலையில் வழக்கம் போல் வெயிலின் தாக்கம் இருந்தது.

செவ்வாய்க் கிழமை காலை 8 மணி வரையிலான 24 மணி நேரத்தில் மாவட்டத்தில் பதிவான மழையளவு விவரம் (மில்லி மீட்டரில்): கடலூர் 21.10, தொழுதூர் 82, விருத்தாசலம் 45, பண்ருட்டி 1, கீழச்செருவாய் 45, வானமாதேவி 15.20, மேல்மாத்தூர் 69, காட்டுமயிலூர் 73, வேப்பூர் 70, குப்பநத்தம் 38.40, லாக்கூர் 138, பெலாந்துறை 11.

**உலக இருதய தின விழிப்புணர்வுப் பேரணி**

உலக இருதய தின விழிப்புணர்வுப் பேரணி பெரியநாயக்கன்பாளையத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி அலுவலகத்தில் தொடங்கிய இந்நிகழ்ச்சிக்கு, வட்டார மருத்துவர் (பொறுப்பு) கே.சங்கீதா, செயல் அலுவலர் கனகராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வட்டார சுகாதார மேற்பார்வையாளர் ஆய்வாளர் வடிவேல் வரவேற்றார். பேரூராட்சித் தலைவர் பி.ஆர்.ஜி.அருண்குமார் கொடியசைத்து பேரணியைத் தொடங்கி வைத்தார்.

நகரின் முக்கிய வீதிகள் வழியாக சென்ற இப்பேரணியில், பி.எஸ்.ஜி, கே.ஜி, ராமகிருஷ்ணா செவிலியர் பயிற்சி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவிகள் பங்கேற்று பொதுமக்களிடம் விழிப்புணர்வு பிரசுரங்களை விநியோகித்தனர். இதில், பேரூராட்சித் துணைத் தலைவர் சந்திரன்,

கவுன்சிலர்கள், வட்டார வளர்ச்சி அதிகாரி சந்திரமோகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### உலக இருதய தின விழிப்புணர்வுப் பேரணி

உலக இருதய தின விழிப்புணர்வுப் பேரணி பெரியநாயக்கன்பாளையத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி அலுவலகத்தில் தொடங்கிய இந்நிகழ்ச்சிக்கு, வட்டார மருத்துவர் (பொறுப்பு) கே.சங்கீதா, செயல் அலுவலர் கனகராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வட்டார சுகாதார மேற்பார்வையாளர் ஆய்வாளர் வடிவேல் வரவேற்றார். பேரூராட்சித் தலைவர் பி.ஆர்.ஜி.அருண்குமார் கொடியசைத்து பேரணியைத் தொடங்கி வைத்தார்.

நகரின் முக்கிய வீதிகள் வழியாக சென்ற இப்பேரணியில், பி.எஸ்.ஜி, கே.ஜி, ராமகிருஷ்ணா செவிலியர் பயிற்சி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவிகள் பங்கேற்று பொதுமக்களிடம் விழிப்புணர்வு பிரசுரங்களை விநியோகித்தனர். இதில், பேரூராட்சித் துணைத் தலைவர் சந்திரன், கவுன்சிலர்கள், வட்டார வளர்ச்சி அதிகாரி சந்திரமோகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### முதல்வருக்கு விதைச் சங்கம் நன்றி

வேளாண்மைத்துறைக்கு பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்துள்ள தமிழக முதல்வருக்கு தமிழ்நாடு விதைச் சங்கம் நன்றி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அச்சங்கத்தின் மாநிலச் செயலர் சி.காளிதாஸ் அளித்த பேட்டி:

தமிழ்நாடு விதை மேம்பாட்டு முகமைக்கு ரூ.25கோடி சுழல் நிதி வழங்கிய தமிழக அரசுக்கு சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். நடப்பாண்டில் நெல், சிறுதானியங்கள், பயிர் வகைகள்,

எண்ணைவித்துப் பயிர்களுக்கு ரூ.29.67 கோடி உற்பத்தி மானியம், விநியோகம் மானியம் வழங்கப்படும் என்ற முதல்வரின் அறிவிப்பை வரவேற்கிறோம். இஸ்ரேல் போன்ற நாடுகளில் உயரிய அறிவியல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பயிர் சாகுபடியில் அதிக மகசூல் பெறும் நடைமுறையினை பார்வையிட தமிழக அரசு 100 விவசாயிகளை வெளிநாடுகளுக்கும், 10 ஆயிரம் விவசாயிகளை பிற மாநிலங்களுக்கும் விவசாயச் சுற்றுலா செல்ல ஏற்பாடு செய்துள்ளது வரவேற்கதக்கது.புதுதில்லியில் நடைபெற்ற காவிரி கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் தமிழக அரசு முன்வைத்த காவிரி மேலாண்மை வாரியம், காவிரி நீர் ஒழுங்குமுறை குழு ஆகியவற்றை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அரசு நிறைவேற்றி தமிழக விவசாயிகளுக்கு சட்டரீதியான நதிநீர் பாதுகாப்பை வழங்க வேண்டும் என்றார்.

### தென்னை மரம் ஏறும் பயிற்சி

தென்னை வளர்ச்சி வாரியம் சார்பில் ஆண்கள், பெண்களுக்கு தென்னை மரம் ஏறும் பயிற்சி அளிக்கப்பட்டது.உடுமலை வட்டத்தில் உள்ள கரட்டூர், ராவணாபுரம், தேவனூர்புதூர் ஆகிய கிராமங்களில் அளிக்கப்பட்ட இந்தப் பயிற்சிகளில் 90 ஆண்கள், 30 பெண்கள் பங்கேற்றனர். இ தில் பட்டதாரிகள், பொறியியல் பட்டதாரிகளும் அடங்குவர். இவர்களுக்கு தென்னை மரம் ஏறும் பயிற்சியுடன் தென்னை பராமரிப்பு, முதலுதவி, யோகா ஆகிய பயிற்சிகள் அளிக்கப்பட்டன. பயிற்சி முடித்தவர்களுக்கு மடத்துக்குளம் எம்எல்ஏ சி.சண்முகவேலு கருவிகளை இலவசமாக வழங்கினார்.தென்னை உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பின் தலைவர் ரவீந்திரன், விவசாய மேலாண்மை நிறுவனத் தலைவர் செல்வராஜ் உள்ளிட்டோர் ஒருங்கிணைத்தனர்.

### முழு மானியத்தில் சொட்டு நீர் பாசனம்: விவசாயிகளுக்கு அழைப்பு

முழு மானியத்தில் சொட்டு நீர் பாசனம் அமைக்க பல்லடம் வட்டார விவசாயிகளுக்கு தோட்டக்கலைத்துறை அழைப்பு விடுத்துள்ளது.

இதுகுறித்து பல்லடம் தோட்டக்கலைத்துறை அலுவலர் மோகன் கூறியது:தக்காளி, மிளகாய், கத்தரி, காலிபிளவர், பீட்ரூட் போன்ற தோட்டப் பயிர்களை பயிரிட்டுள்ள சிறு, குறு விவசாயிகள், அரசின் மானியத்துடன் சொட்டு நீர் பாசனம் அமைக்கலாம். 5 ஏக்கருக்கும் குறைவாக இருக்கும் விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசனம் அமைக்க முழுமையாக மானியம் வழங்கப்படுகிறது. அதற்கு மேற்பட்ட நிலம் உள்ளவர்களுக்கு 75 சதவீத மானியம் வழங்கப்படும். சிட்டா, அடங்கல், குடும்ப அட்டை , இரண்டு புகைப்படம், வரைபடம், மண் மாதிரி, நீர் மாதிரி, வி.ஏ.ஓ., சான்றுடன், பல்லடம் தோட்டக்கலைத் துறையில் விண்ணப்பிக்கலாம் என்றார்.

**தாளவாடியில் பலத்த மழை**

தாளவாடியில் பலத்த மழை பெய்ததால் அப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பருவமழை பொய்த்து விட்டதால் தாளவாடி விவசாயிகள் சாகுபடி செய்துள்ள மக்காச்சோளம், மஞ்சள், முட்டைகோஸ், எள் ஆகிய பயிர்கள் வாடிய நிலையில் காணப்பட்டன.

இந்நிலையில், தாளவாடியில் செவ்வாய்க்கிழமை 2 மணி நேரம் தொடர்ந்து பலத்த மழை பெய்ததால் சாலையில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது.

மேலும், சூசைபுரம், தொட்டபுரம், அருள்வாடி, மெட்டல்வாடி, பனஹள்ளி, கொங்கஹள்ளி ஆகிய பகுதிகளிலும் பலத்த மழை பெய்ததால் பயிர்களில் வெள்ளநீர் தேங்கி நின்றது. தொடர்ந்து, இதேபோல் மழை பெய்தால் நிலத்தடி நீர் மட்டம் உயரும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

**"நெல் இயந்திர நடவுக்கு ரூ. 27 லட்சம் நிதி ஒதுக்கீடு'**

காவேரிப்பாக்கம் ஒன்றியத்தில் நிகழ் நிதியாண்டில் நெல் இயந்திர நடவுக்காக ரூ.27 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வேளாண் இணை இயக்குநர் ஜெயசுந்தர் கூறினார்.

காவேரிப்பாக்கம் ஒன்றியத்துக்கு உள்பட்ட கரிவேடு கிராமத்தில் கருணாகரன் நிலத்தில் 10 ஏக்கரில் நெல் இயந்திர நடவுப் பணி நடந்தது. இப்பணியை வேலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ஜெயசுந்தர் நேரில் பார்வையிட்டு, இத்திட்டத்தை ஆயர்பாடி, ஓச்சேரி, தர்மநீதி போன்ற கிராமங்களிலும் முழு அளவில் செயல்படுத்த அதிகாரிகளுக்கு அறிவுரை கூறினார்.

பின்னர் அவர் கூறியதாவது:

இத்திட்டத்தின் மூலம் நடவு செய்யும் விவசாயிகளுக்கு அரசு மானியமாக ஒரு ஹெக்டேருக்கு ரூ.3 ஆயிரம் வீதம் மானியம் வழங்கப்படுகிறது. காவேரிப்பாக்கம் ஒன்றியத்தில் நிகழ் நிதியாண்டில் நெல் இயந்திர நடவு செய்ய 700 ஹெக்டேர் நிலம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, ரூ.27 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மீதியுள்ள 300 ஹெக்டேர் பரப்பளவுக்கு விவசாயிகள் தங்கள் பெயர் பதிவு செய்து பயன் பெற வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

காவேரிப்பாக்கம் வேளாண்மை உதவி இயக்குநர் ஸ்டீபன் ஜெயக்குமார், வேளாண்மை அலுவலர்கள் லீலாவதி, சூரியநாராயணன், சுரேஷ், முருகன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**வீழ்ச்சியில் முட்டைக்கோழி பண்ணைத் தொழில்**

முட்டைக்கோழி பண்ணைத் தொழில் கடும் சோதனையை எதிர்கொண்டுள்ளது. கடந்த 3 ஆண்டுகளில் ரூ.1,500 கோடி அளவுக்கு பண்ணையாளர்கள் இழப்பைச் சந்தித்துள்ள நிலையில், 100 பண்ணைகள் மூடப்பட்டுள்ளன.

1970-களில் ஒருங்கிணைந்த சேலம் மாவட்டம், நாமக்கல் பகுதியில் விவசாயம் சார்ந்த உப தொழிலாக அதிகபட்சமாக 500 கோழிகள் வைத்து பண்ணைகள் தொடங்கப்பட்டன. கிட்டத்தட்ட 45 ஆண்டுகளில்

தமிழகம் முழுவதும் விரிவடைந்து, தற்போது சுமார் 1,200 கோழிப்பண்ணைகள் உள்ளன. இதில், சுமார் 1,000 பண்ணைகள் நாமக்கல், சேலம் மாவட்டங்களில் மட்டுமே உள்ளன.

இதில், 10 ஆயிரம் முதல் 25 ஆயிரம் கோழிகள் வரை 600 பண்ணைகளும், 25 ஆயிரம் முதல் 1 லட்சம் வரை 400 பண்ணைகளும், 1 லட்சம் முதல் 3 லட்சம் வரை 200 பண்ணைகளும், 5 லட்சம் கோழிகள் உள்ள 5 பண்ணைகளும் உள்ளன.

1980-களில் மிகவும் லாபகரமானதாக இத் தொழில் இருந்தது. வறட்சி, பறவைக் காய்ச்சல் போன்ற இயற்கை சீற்றங்களால் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை சில மாதங்கள் இழப்பைச் சந்திக்க நேர்ந்தாலும், அடுத்துவரும் ஆண்டுகளில் லாபகரமானதாக இருந்தது. ஆனால், கடந்த 3 ஆண்டுகளாக இத் தொழில் கடுமையான நெருக்கடியில் உள்ளது.

மூடப்பட்ட பண்ணைகள்: முட்டை விலையானது, உற்பத்தி செலவைக் காட்டிலும் குறைவாக விற்கப்படுவதால், தொடர் இழப்பை பண்ணையாளர்கள் எதிர்கொண்டுள்ளனர். பண்ணையாளர்கள் கணக்கீட்டின்படி, முட்டை ரூ.3.50-க்கு கீழே விற்கப்படுமாயின், அது நஷ்டம் தான். கடந்த 3 ஆண்டுகளாக, முட்டையின் சராசரி விலை ரூ.2.50 முதல் ரூ.3 வரை மட்டுமே உள்ளது. உரிய விலை கிடைக்காததால் ஏற்பட்ட நஷ்டத்தில் சுமார் 100 கோழிப் பண்ணைகள் மூடப்பட்டுள்ளன.

நாமக்கல் மாவட்டத்தில் மட்டும் 80 பண்ணைகள் மூடப்பட்டுள்ளன. இந்தப் பண்ணைகள் பெரும்பாலும் 1 லட்சம் முட்டைக் கோழிகளை வைத்திருந்தவை. இந்த பண்ணைகள் மூடப்பட்டதால், இங்கு முதலீடு செய்திருந்த சுமார் ரூ.500 கோடி முதலீட்டுத் தொகையை பண்ணையாளர்கள் முழுவதுமாக இழந்தனர்.

3 ஆண்டுகளில் ரூ.1,000 கோடி நஷ்டம்: தமிழகத்தில் தற்போதுள்ள 1,200 பண்ணைகளில், சுமார் 5 கோடி கோழிகள் உள்ளன. தினமும் சுமார் 3 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. சராசரியாக முட்டைக்கு தினமும் 50 காசு வரை பண்ணையாளர்களுக்கு இழப்பு ஏற்படுகிறது. கடந்த 3 ஆண்டுகளாக இதே நிலை தொடர்வதால், ரூ.1,000 கோடி அளவுக்கு பண்ணையாளர்கள் இழப்பைச் சந்தித்து வருகின்றனர். இதனால், பண்ணைகள் தொடர்ந்து மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

விலை நிர்ணயத்தில் குளறுபடி: முட்டை விலையை நிர்ணயம் செய்வது, கோழிப் பண்ணையாளர்களின் பிரச்னைகளை அரசின் கவனத்துக்குக் கொண்டு சென்று உதவுவது போன்றவற்றை தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு (என்இசிசி) செய்து வந்தது. கடந்த 10 ஆண்டுகளாக, என்இசிசி இந்தப் பணிகளை முழுவீச்சோடு செய்வதில்லை என கோழிப் பண்ணையாளர்களின் குற்றச்சாட்டாக உள்ளது.

சந்தை விலையை அறிந்து முட்டை விலை நிர்ணயம் செய்யாதது, நிர்ணயிக்கப்பட்ட விலையைவிட குறைந்த விலைக்கு வியாபாரிகள் முட்டை கொள்முதல் செய்வதைத் தடுக்க உரிய முயற்சி மேற்கொள்ளாதது போன்றவற்றால், முட்டைக்கோழி பண்ணையாளர்கள் கடும் இழப்பைச் சந்திக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

நல வாரியம் கோரும் பண்ணையாளர்கள்: முட்டைக்கோழி பண்ணையாளர்களுக்கு தற்போதுள்ள பெரிய பிரச்னை, தீவன விலையேற்றம். கடந்த மூன்று ஆண்டுகளில், தீவன விலை 200 சதவீதம் வரை உயர்ந்துள்ளது என தமிழ்நாடு முட்டைக்கோழி பண்ணையாளர்கள் சம்மேளன துணைத் தலைவர் வாங்கிலி சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியது, தீவனங்கள், மருந்துகள் விலை 50 சதவீதம் உயர்ந்தால் முட்டை விலை 5 சதவீதம்தான் உயருகிறது. இதனால், பண்ணையாளர்களுக்கு பெரும் இழப்பு ஏற்படுகிறது.

முட்டையை மைனஸ் விலைக்கு விற்கக் கூடாது. இதனை என்இசிசி கண்காணிக்க வேண்டும். அப்போதுதான் பண்ணையாளர்கள் இழப்பைச் சந்திப்பது தவிர்க்கப்படும்.

இதுபோல், சத்துணவு முட்டை டெண்டரில், பண்ணையாளர்கள் நேரடியாக பங்கேற்கும் பழைய நடைமுறை மீண்டும் வர வேண்டும். தீவன மூலப்பொருள்களை வேளாண் துறை மூலம் அரசே கொள்முதல் செய்து வழங்க வேண்டும். கோழிப் பண்ணையாளர்களின் பிரச்னைகளை அரசின் நேரடி கவனத்துக்கு எடுத்துச்செல்ல, கோழிப் பண்ணையாளர்களுக்கென தனியாக நல வாரியத்தை ஏற்படுத்த வேண்டும்.

இதுபோல் தொடர் இழப்பால் வருமான வரி செலுத்தாத பண்ணையாளர்களிடம், வருமான வரித் துறையினர் கணக்குகளை ஆய்வு செய்வதாக நெருக்கடி ஏற்படுத்தி வருகின்றனர். வங்கிக் கடனை செலுத்த முடியாமல் பரிதவிக்கும் பண்ணையாளர்களை, வருமானவரி செலுத்த நிர்பந்தப்படுத்துவதை கைவிட மத்திய அரசு நடவடிக்கையெடுக்க வேண்டும்.

பண்ணையாளர்களை ஒருங்கிணைக்க முயற்சி: பண்ணையாளர்கள் வியாபாரிகளை மட்டுமே நம்பியதால்தான், நஷ்டத்துக்கு தொழில் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், நேரடியாக விற்பனை செய்ய வேண்டும் என வலியுறுத்தி வருகிறோம். சிறு பண்ணையாளர்களிடமிருந்து அன்றைய விலை நிலவரப்படி சம்மேளனம் நேரடியாக முட்டையைக் கொள்முதல் செய்துகொள்ள திட்டமிட்டுள்ளது என வாங்கிலி சுப்பிரமணியன் தெரிவித்தார்.

### கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பரவலாக மழை

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக தொடர்ந்து பெய்து வரும் மழையால் குளிர்ந்த தட்பவெப்ப நிலை நிலவுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக வெயிலின் தாக்கம் அதிகமாக காணப்பட்டது. இதனால், பொதுமக்கள் அவதியுற்றனர்.இந்த

நிலையில், கடந்த சில நாள்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால், பகலில் வெயிலின் தாக்கம் குறைந்து, குளிர்ந்த தட்பவெப்பம் நிலவுகிறது. இந்தத் தொடர் மழையால் ஏரிகள், நீர்நிலைகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. மேலும், இரவு நேரங்களில் குளிர்ந்த காற்று வீசுகிறது.

மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை காலை 8 மணி வரை பதிவான மழையளவு (மி.மீ.): பெனுகொண்டாபுரம் 30.3, போச்சம்பள்ளி 24, ஊத்தங்கரை 20, நெடுங்கல் 15, பாரூர் 10.6, கிருஷ்ணகிரி 2.2.

**இதய தின விழிப்புணர்வு மாரத்தான், சைக்கிள் பேரணி**

பாளையங்கோட்டையில் உலக இதய தினத்தையொட்டி செவ்வாய்க்கிழமை மினி மாரத்தான் ஓட்டம், சைக்கிள் பேரணி நடைபெற்றன.

இதையொட்டி திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி சார்பில் பாளையங்கோட்டையில் அண்ணா விளையாட்டு அரங்கில் தொடங்கிய இந்த மினி மாரத்தான் ஓட்டத்தை மாநகராட்சி மேயர் இ. புவனேஷ்வரி கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

இதில், ஆண்களுக்கு 5 கி.மீ. தொலைவு, பெண்களுக்கு 3 கி.மீ. தொலைவு என நடைபெற்ற இந்த ஓட்டத்தில் அரசு மருத்துவக் கல்லூரி செவிலியர் பள்ளி மாணவிகள், மாவட்ட விளையாட்டு விடுதி மாணவர்கள் 300-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில், அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் கே. சித்திஅத்தியமுனவரா முன்னிலை வகித்துப் பேசியதாவது: உலக அளவில் இதய நோயால் 17.3 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தியாவில் இதய நோய் பாதிப்பால் உயிரிழப்போர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. குறிப்பாக 30 முதல் 40 வயதுக்கு உள்பட்டோர் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். எனவே புகைப்பிடித்தல், மது

அருந்துதல், பாதிப்பை ஏற்படுத்தும் உணவு வகைகளை தவிர்க்க வேண்டும். உடற்பயிற்சியை கட்டாயமாக்க வேண்டும் என வலியுறுத்தி விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படும் என்றார் அவர்.

மருத்துவக் கல்லூரி இதய நோய் பிரிவுத் துறை தலைவர் ரவிச்சந்திரன், மக்கள் தொடர்பு அலுவலர் டாக்டர் சி. ரேவதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

போட்டி முடிவில் ஆண்கள் பிரிவில் விளையாட்டு மேம்பாட்டு ஆணைய வீரர் ஏ. மனோ முதலிடம், வீரவநல்லூர் டேனியல் உடற்கல்வியியல் கல்லூரி மாணவர் எஸ். ரூபன் 2ஆவது இடம், விளையாட்டு மேம்பாட்டு ஆணைய வீரர் பி.கே.அனில்குமார் 3 ஆவது இடம் பெற்றனர்.

பெண்கள் பிரிவில் விவேகானந்தா வித்யாஷ்ரம் பள்ளி மாணவிகள் சி. சுப்புலட்சுமி முதலிடம், எம். ஆறுமுக்கனி 2ஆவது இடம், பி. சுப்புலட்சுமி 3ஆவது இடம் பெற்றனர்.

முதலிடம் பெற்றவருக்கு ரூ.3 ஆயிரம், 2ஆவது இடம் பெற்றவருக்கு ரூ.2 ஆயிரம், 3ஆம் இடம் பெற்றவருக்கு ரூ. 1000 என ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன.

பின்னர் மேயர் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் க.ம. குழந்தைவேல், திருநெல்வேலி கோட்டாட்சியர் ஆகியோர் பரிசுகளை வழங்கினர்.

தடகளப் பயிற்றுநர் ஆர். சத்யகுமார், டென்னிஸ் பயிற்றுநர் எஸ். குமரமணிமாறன், மருத்துவக் கல்லூரி பேராசிரியர்கள் எட்வின்ராஜ்குமார், டாக்டர் அருள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மாவட்ட விளையாட்டு அலுவலர் பா. பிராங்பால்ஜெயசீலன் வரவேற்றார். நீச்சல் பயிற்றுநர் ஜி. பிரேம்குமார் நன்றி கூறினார்.

சைக்கிள் பேரணி: திருநெல்வேலி ஷிபா மருத்துவமனை, இந்திய செஞ்சிலுவைச் சங்கம் சார்பில் பாளையங்கோட்டை வ.உ.சி.

மைதானத்தில் இருந்து புறப்பட்ட சைக்கிள் பேரணியை கோட்டாட்சியர் பெர்மிவித்யா தொடங்கிவைத்தார்.

இதில் ஷிபா மருத்துவமனை நிர்வாக இயக்குநர் எம்.கே.எம். முஹம்மதுஷாபி தலைமை வகித்தார். செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் டி.ஏ. பிரபாகர், செயலர் மு. சொக்கலிங்கம், டாக்டர் முகம்மதுஅராபத் மற்றும் செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள், டாக்டர்கள் பங்கேற்றனர். பேரணி அண்ணா விளையாட்டு மைதானத்தில் நிறைவடைந்தது.

கலந்துரையாடல்: திருநெல்வேலி உடையார்பட்டி லட்சுமி மருத்துவமனையில் தென்னக இதய மையம் சார்பில் நடைபெற்ற இதய தினத்தையொட்டி நடைபெற்ற கலந்துரையாடலில் டாக்டர் ஆர். சீனிவாசன், மருத்துவமனை நிர்வாக இயக்குநர் லட்சுமணன், டாக்டர் மீனா, மக்கள் தொடர்பு அலுவலர் வேல்முருகன் ஆகியோர் பேசினர்.

**தொடர் மழையால் ரூ.1 கோடி வாழைகள் சேதம்: நிவாரணம் வழங்க விவசாயிகள் கோரிக்கை**

திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாகப் பெய்த மழையால் சுமார் ரூ.1 கோடி மதிப்புள்ள வாழைகள் சேதமடைந்துள்ளன. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தாமிரவருணி பாசனத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் 19 ஆயிரம் ஹெக்டேரில் நெல், 5500 ஹெக்டேரில் வாழைப் பயிர்கள் நடவு செய்யப்பட்டுள்ளன. தென்மேற்குப் பருவமழை சரிவர பெய்யாத நிலையில் அணைகளின் நீர் இருப்பு குறைந்து பாசனத்துக்கு சுழற்சி முறையில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக மழை பெய்து வருகிறது. 2 வாரங்களுக்கு முன்பு சேரன்மகாதேவி, வீரவநல்லூர் பகுதிகளில் சூறைக்காற்றுடன் பெய்த மழைக்கு உதயமார்த்தாண்டபுரம், சக்திகுளம் பகுதியில் 30 ஆயிரம் வாழைகள் சேதமடைந்தன.

2 தினங்களுக்கு முன்னர் அம்பாசமுத்திரம் பகுதியில் சூறைக்காற்றுடன் பெய்த மழையில் கல்லிடைக்குறிச்சி, வீரவநல்லூர், காருகுறிச்சி பகுதியில் சுமார் 20 ஆயிரம் வாழைகள் சேதமடைந்தன.

இந்நிலையில், கோடகன் கால்வாய் பாசனத்தில் நடுக்கல்லூர், மேலக்கல்லூர் பகுதியில்

2 தினங்களுக்கு முன்னர் சூறைக்காற்றுடன் பெய்த மழையில், குலைதள்ளிய பருவத்தில் இருந்த சுமார் 50 ஆயிரம் வாழைகள் சாய்ந்து சேதமடைந்திருப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இழப்பீடு வழங்கக் கோரிக்கை: இதுகுறித்து மாவட்ட விவசாயிகள் சங்கச் செயலர் ஆர். கசமுத்து கூறியதாவது: திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளாகப் பருவமழை பொய்த்ததாலும், பருவம் தவறி அறுவடைப் பருவத்தில் பெய்த மழையாலும் நெல், வாழைப்பயிர்கள் பெருமளவில் சேதமடைந்து விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

ஒவ்வொரு முறையும் இயற்கைச்சீற்றத்தால் ஏற்படும் பாதிப்பு குறித்து அதிகாரிகள் கணக்கெடுத்து அரசுக்கு அனுப்பி வைக்கின்றனர். ஆனால், அரசு கடந்த 3 ஆண்டுகளாக விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கவில்லை.

நிகழாண்டில் போதிய மழை பெய்யாத நிலையில் அம்பாசமுத்திரம் வட்டத்தில் ஆழ்வார்குறிச்சி, கீழஆம்பூர் பகுதியில் சுமார் 100 ஏக்கரில் நெற்பயிர்கள் கருகி சேதமடைந்துள்ளன. இதேபோல் பலத்த காற்றுடன் பெய்த மழையால் கல்லிடைக்குறிச்சி, வீரவநல்லூர், சேரன்மகாதேவி, கல்லூர் பகுதியில் சுமார் ஒரு லட்சம் வாழைகள் குலைதள்ளிய பருவத்தில் சாய்ந்து சேதமடைந்துள்ளன. இதனால் விவசாயிகளுக்கு ரூ.1 கோடி வரை இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்றார் அவர்.

மழை நீடிப்பு: திருநெல்வேலி மாவட்டத்தில் பரவலாகப் பெய்துவரும் மழை செவ்வாய்க்கிழமையும் நீடித்தது. காலை 8 மணியுடன்

முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக கொடுமுடியாறு அணையில் 50 மி.மீ. மழை பதிவானது.

பாபநாசம் அணையின் நீர்மட்டம் 56.20 அடி, சேர்வலாறு அணை நீர்மட்டம் 69.42 அடி, மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 57.10 அடி, கடனாநதி அணை நீர்மட்டம் 30.50 அடி, ராமநதி அணை நீர்மட்டம் 38.25 அடி, அடவிநயினார் அணை நீர்மட்டம் 56.75 அடியாக இருந்தது.

**செட்டிக்குளத்தில் ரூ. 1.50 லட்சத்துக்கு சின்ன வெங்காயம் ஏலம்**

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், செட்டிக்குளத்தில் உள்ள வெங்காய வணிக வளாகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற திறந்தமுறை ஏலத்தில் 5,075 கிலோ சின்ன வெங்காயம் ரூ. 1.58 லட்சத்துக்கு விற்பனையானது.

சத்திரமனை, அம்மாபாளையம், இரூர், செட்டிக்குளம், நாட்டார்மங்கலம், பொம்மனப்பாடி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 30 விவசாயிகள் தங்களது சின்ன வெங்காயத்தை திறந்தமுறை ஏலத்துக்கு கொண்டு வந்தனர். இதில் பங்கேற்ற செட்டிக்குளம், குரூர், சீதேவிமங்கலம், சத்திரமனை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 16 வியாபாரிகள் 90 மூட்டை (5,0755 கிலோ) சின்ன வெங்காயத்தை, புதியது அதிகபட்சமாக 1 கிலோ ரூ. 34க்கும், விதை வெங்காயம் அதிகபட்சமாக 1 கிலோ ரூ. 44க்கும், சராசரியாக 1 கிலோ ரூ. 31க்கும் விற்பனையானது.

இதன்மூலம் ரூ. 1,58,814க்கு விற்பனை நடைபெற்றது. இந்த வணிக வளாகத்தில் வாரம்தோறும் செவ்வாய் மற்றும் வியாழக்கிழமை திறந்தமுறை ஏலம் நடைபெற்று வருகிறது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## தமிழகத்தில் தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தை அமல்படுத்தும் காலக்கெடுவை நீட்டிக்க வேண்டும் பிரதமருக்கு ஜெயலலிதா கடிதம்



சென்னை,

தமிழகத்தில் தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தை அமல்படுத்த காலஅவகாசம் வேண்டும் என்று பிரதமருக்கு ஜெயலலிதா கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து பிரதமர் நரேந்திர மோடிக்கு முதல்–அமைச்சர் ஜெயலலிதா எழுதிய கடிதத்தில் கூறப்பட்டு இருப்பதாவது:–

<u>முந்தைய பிரதமர்</u>

பொதுவிநியோக திட்டத்தை கடந்த பல ஆண்டுகளாக தமிழகம் வெற்றிகரமாக நிறைவேற்றி வருகிறது என்பது உங்களுக்கு தெரியும். இதற்காக சுப்ரீம் கோர்ட்டு உள்பட பல்வேறு அமைப்புகளின் பாராட்டை தமிழக அரசு பெற்றுள்ளது. யாரையும் தவிர்த்துவிடாமல் அனைவருக்கும் இதன்மூலம் உணவை அரசு வழங்கி வருகிறது.

தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தை தமிழகத்தில் அமல்படுத்துவதில் உள்ள பிரச்சினைகள் இருப்பது பற்றி முந்தைய பிரதமருக்கு கடந்த 24.8.13 அன்று கடிதம் எழுதியிருந்தேன். அதுதொடர்பான சில முக்கிய காரணங்களையும் குறிப்பிட்டிருந்தேன்.

<u>முக்கிய காரணங்கள் எவை?</u>

கடந்த 3.6.14 மற்றும் 7.8.15 அன்று உங்களிடம் கொடுத்த மனுவிலும் அந்த காரணங்களை குறிப்பிட்டிருந்தேன். அவற்றை மீண்டும் சொல்ல விளைகிறேன். நெல் உள்ளிட்ட உணவு தானியங்களை கூடுதலாக பெறும் மாநிலங்களுக்கு ஏற்கனவே உறுதி அளிக்கப்பட்ட விலையிலேயே அவற்றை வழங்கவேண்டும் என்ற வாக்குறுதியை மத்திய அரசு அளிக்க வேண்டும். கூடுதல் தானியத்தை தற்போதைய விலையான கிலோ 3 ரூபாய் என்ற விலையிலேயே தொடர்ந்து கொடுக்க வேண்டும்.

நகர்ப்புறங்களில் வசிக்கும் அனைவருக்கும் மானிய விலை உணவு தானியங்களை கிடைக்க முன்னுரிமை அளிக்க வேண்டும். அது இல்லாதபட்சத்தில், கிராமப்புற மக்களுக்கு உள்ளதுபோல், குறைந்தபட்சம் 75 சதவீத நகர்ப்புற மக்களுக்காவது மானியத்தில் தானியங்களைக் கொடுக்க வேண்டும்.

சட்டத்திருத்தங்கள்

உணவு பாதுகாப்பு சட்டத்தில், மானியத்துடன் கூடிய உணவு தானியங்கள், மூன்று ஆண்டுகள் வரை அளிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. அதை குறைந்தது 10 ஆண்டுகள் வரை நீட்டிக்கவேண்டும்.

உணவு தட்டுப்பாடு கடுமையாக ஏற்படக்கூடிய காலகட்டத்தில், அவற்றை இறக்குமதி செய்வதற்கான சட்ட வழிமுறைகளை செய்யவேண்டும். இதுதான் சரியான உணவு பாதுகாப்பு சட்டமாக இருக்கமுடியும். உணவு பற்றாக்குறை வரக்கூடிய காலகட்டங்களில், மாநிலங்களுக்கு நிதி அளிக்கக்கூடிய விதிகளால் தமிழகத்தின் நலனுக்கு போதிய பாதுகாப்பு கிடைக்காது.

சமூக, பொருளாதார மற்றும் சாதிவாரி கணக்கெடுப்புக்கான மாவட்டவாரியான பணிகள் முடிக்கப்படவில்லை. இதற்கு இரண்டு ஆண்டுகள் ஆகும்.

தானியங்களுக்கு பதிலாக பணம், உணவு கூப்பன்கள் ஆகியவற்றை அளிக்கும் அதிகாரத்தை மத்திய அரசுக்கு வழங்கும் சட்டப்பிரிவு திருத்தப்பட வேண்டும். பணமாக வழங்கும் திட்டங்கள் அனைத்தும் மாநில அரசு மூலமாகத்தான் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கான திருத்தங்கள் அவசியம் என்பது போன்ற முக்கிய கோரிக்கைகளை ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன்.

2 ஆண்டுகளுக்கும் மேலாக

சட்டத்தில் உள்ள இந்த குறைபாடுகள் களையப்படவில்லை. அதுவரை தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தின் அமலாக்கத்தை, குறிப்பாக தகுதியுள்ள குடும்பத்தினரை அடையாளம் காணும் வகையில், 2 ஆண்டுகளுக்கும் மேலாக தள்ளிவைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளேன்.

இந்த நிலையில், அனைத்து மாநிலங்களுக்கும் இந்த சட்டத்தை அமலாக்குவதற்கு 30.9.15 வரை (இன்றுவரை) மத்திய அரசு

காலஅவகாசம் வழங்கியுள்ளது. அதற்குள் பயனாளிகளை அடையாளம் காணும் நடவடிக்கையை முடிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஆதார் இணைக்கும் பணி

மத்திய நுகர்வோர் மற்றும் உணவு, பொது வினியோகத்துறை மந்திரி கடந்த 17.9.15 அன்று எழுதிய கடிதத்தில், தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தை அமல்படுத்துவதின் அவசியத்தை எழுதியுள்ளார். ஆனால் அந்த சட்டம் குறித்த தமிழக அரசின் பல்வேறு கவலைகளுக்கு அவர் திருப்திகரமாக பதில் அளிக்கவில்லை.

தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தை அமல்படுத்துவதற்கான காலக்கெடுவாக 30.9.15 என்ற தேதியை நிர்ணயித்திருப்பது, நடைமுறைக்கு உகந்ததாக இருக்காது. பொதுவினியோக முறைகளை கம்ப்யூட்டர் மயமாக்கும் பணியை இப்போது கையில் எடுத்திருக்கிறோம். அதோடு, ரேஷன் அட்டைகள், ஆதார் எண் ஆகியவற்றை இணைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.

ஓராண்டாவது...

இந்த பணிகள் முடிந்த பிறகுதான், தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தில் முன்னுரிமை பெறும் குடும்பங்கள் எவை என்பதை கண்டறிய முடியும். இந்த விஷயத்தில் தமிழகத்தின் கோரிக்கைகள் தொடர்பாக தெளிவான முடிவை மத்திய அரசு எடுக்கவேண்டும்.

இந்த நேரத்தில் தேவையில்லாமல் செயல்பட்டு, தமிழகத்தின் பெருமைக்குரிய பொதுவினியோக திட்ட செயல்பாட்டில் இடர்பாட்டை ஏற்படுத்திவிடக்கூடாது. எனவே தமிழகத்தில் தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தை அமல்படுத்துவதற்கான காலத்தை குறைந்தபட்சம் ஒரு ஆண்டுக்காவது நீட்டித்துத்தர வேண்டும்.

கோதுமை, அரிசி ஒதுக்கீடு

இந்த காலத்தில் அந்த சட்டம் குறித்த தமிழகத்தின் அவசியமான சந்தேகங்களை மத்திய அரசு கவனிக்க வேண்டும்.

தற்போதுள்ள சூழ்நிலைப்படி தமிழகத்துக்கு தரப்பட வேண்டிய உணவுதானிய ஒதுக்கீட்டின் அளவு அதே நிலையில், அதே விலையில் பராமரிக்கப்பட வேண்டும். அந்த்யோதயா அன்ன யோஜனா திட்டத்தில் வரும் குடும்பத்தினருக்கான 65 ஆயிரத்து 262 மெ.டன், வறுமை கோட்டுக்கு கீழ் வரும் குடும்பங்களுக்கான ஒரு லட்சத்து 4 ஆயிரத்து 936 மெ.டன், வறுமை கோட்டுக்கு மேல் உள்ள குடும்பங்களுக்கான ஒரு லட்சத்து 26 ஆயிரத்து 255 மெ.டன் எடை உணவு தானியம் ஆகியவையும் இந்த ஒதுக்கீட்டுக்கு உட்படுகிறது.

அதுமட்டுமல்ல, கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து ஓராண்டுக்கு, வறுமை கோட்டுக்கு கீழுள்ள குடும்பங்களுக்கு தரப்படும் விலையில் கூடுதலாக அளிக்கப்பட வேண்டிய 27 ஆயிரத்து 969 மெ.டன் அரிசி, 3 ஆயிரத்து 108 மெ.டன் கோதுமை ஆகியவையும் தமிழகத்துக்கு ஒதுக்கப்பட வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பொள்ளாச்சி, கிணத்துக்கடவு பகுதியில் பலத்த மழை விவசாயிகள் மகிழ்ச்சி



பொள்ளாச்சி மற்றும் கிணத்துக்கடவு பகுதிகளில் பலத்த மழை பெய்தது. இதன் காரணமாக ரோடுகளில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

பலத்த மழை

பொள்ளாச்சி பகுதியில் கடந்த ஜூன் மாதம் தென்மேற்கு பருவமழை பெய்தது. அதன்பிறகு அவ்வப்போது மழை பெய்தது. இந்த நிலையில் கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இதனால் பொள்ளாச்சியை சுற்றி உள்ள நீர்நிலைகள் வற்ற தொடங்கின.

இந்த நிலையில் நேற்று காலை வெயில் அடித்தது. அதன்பிறகு மதியத்திற்கு பிறகு 2 மணி அளவில் பலத்த காற்று மற்றும் இடி-மின்னலுடன் கனமழை கொட்டியது.

விவசாயிகள் மகிழ்ச்சி

மழையின் காரணமாக சாலைகளில் மழைநீர் வெள்ளமாக ஓடியது. தாழ்வான பகுதிகளுக்குள் மழைநீர் புகுந்தது. பொள்ளாச்சி சப்-கலெக்டர் அலுவலகத்தில் மழை நீர் தேங்கி நின்றதால் பொதுமக்கள் மிகவும் அவதிபட்டனர்.

மழை காரணமாக வெப்ப சலனம் நீங்கி குளிர்ந்த காற்று வீசியதால், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். தென்மேற்கு பருவமழை போதிய அளவு பெய்யாததால் வேதனை அடைந்த விவசாயிகள் நேற்று பெய்த மழையால் மகிழ்ச்சி அடைந்தனர்.

கிணத்துக்கடவு

இதே போல் நேற்று மதியம் 3 மணிக்கு மேல் கிணத்துக்கடவு பகுதியிலும் மழை பெய்ய ஆரம்பித்தது. நேரம் செல்ல, செல்ல மழை கன மழையாக கொட்டியது. இதனால் கோவை-பொள்ளாச்சி ரோட்டில் மழை நீர் வெள்ளம் போல் ஓடியது. அந்த வழியாக சென்ற வாகனங்கள் வெள்ள நீரை வாரி இறைத்தப்படி சென்றன.நீண்ட நாட்களுக்கு பிறகு மழை கொட்டியதால் கிணத்துக்கடவு சுற்றுவட்டார பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். தக்காளி, நிலக்கடலை, வாழை, பச்சை

மிளகாய் ஆகியவை பூக்கும் பருவத்தை எட்டியும், மழை இல்லையே என்று ஏங்கிய விவசாயிகளின் மனத்தை பால் வார்த்தது போன்று நேற்று மாலையில் மழை கொட்டியது. 3.15 மணிக்கு ஆரம்பித்த மழை 4 மணி வரை 45 நிமிடங்கள் பலத்த மழையாக கொட்டியது. அதன்பிறகு அவ்வப்போது தூறிக்கொண்டே இருந்தது. மாலை 5.30 மணிக்கு பிறகு மீண்டும் மழை கொட்ட தொடங்கியது. கிணத்துக்கடவை சுற்றி உள்ள தாமரைக்குளம், கோவில்பாளையம் பகுதிகளில் பலத்த மழை பெய்தது.

**தவறான தகவல்களை நம்பி குறைந்த விலையில் தேங்காய்களை விற்க வேண்டாம் விவசாயிகளுக்கு மத்திய தென்னை வளர்ச்சி வாரியம் அறிவுரை**



பொள்ளாச்சி,

தவறான தகவல்களை நம்பி குறைந்த விலையில் தேங்காய்களை விற்க வேண்டாம் என விவ சாயிகளுக்கு மத்திய தென்னை வளர்ச்சிவாரி யம் அறிவுறுத்தி உள் ளது.

மத்திய தென்னை வளர்ச்சி வாரியம் வெளியிட்டு உள்ள செய்திக்குறிப்பில் கூறி இருப்பதாவது:-

விலை வீழ்ச்சிதேங்காய் விலையை செயற்கையாக வீழ்ச்சியடைய

வைக்க சில நிறுவனங்கள், வியாபாரிகள் கூட்டு சேர்ந்து முயற்சி செய்து வருகின்றனர். இதனால் தான் தற்போது கொப்பரை மற்றும் தேங்காய் எண்ணெய் விலை செப்டம்பர் 6-ந்தேதி முதல் குறைய தொடங்கி உள்ளது.

தென்னை அதிகம் பயிரிடப்பட்டு உள்ள கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, ஒடிசா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் தென்மேற்கு பருவமழை வழக்கத்தை விட குறைந்த அளவில் பெய்து உள்ளது. இதனால் வரும் நாட்களில் தேங்காயின் விளைச்சலில் மாற்றம் ஏற்பட வாய்ப்பு இல்லை. பருவமழை குறைந்து உள்ளதால் தற்போது இளநீரின் விலை உயர தொடங்கி உள்ளது. தென்னை உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு மூலம் பதனீர் உற்பத்தி உயர்ந்து உள்ளது.வருகின்ற காலங்களில் சந்தைக்கு வரும் கொப்பரை மற்றும் தேங்காய் எண்ணெய் அளவு குறைய வாய்ப்பு உள்ளது.

வளர்ச்சி

இந்தியாவில் இருந்து ஏற்றுமதியாகும் தேங்காய் பொருட் கள் 2015-16-ல் நிலையான வளர்ச்சி கண்டுள்ளது. கொப்பரை மற்றும் தேங்காய் எண்ணெய் மட்டுமல்லாது தேங்காய் அதிக அளவு மதிப்பு கூட்டும் பொருளாக மாற்றப்படுகிறது. தேங்காய் எண்ணெய் இறக்குமதி 2014-15-ம் ஆண்டை ஒப்பிடும் போது 2015-16-ல் 25 சதவீதம் குறைந்து உள்ளது. விழா காலங்கள் தொடங்க உள்ளதால் மேலை நாடுகளில் தேங்காய் எண்ணெயின் தேவை அதிகரித்து உள்ளது.

விழிப்புடன் இருக்க வேண்டும்

கடந்த 2 மாதங்களில் தேங்காய் பொருட்கள் விலை நிலவிவரங்களை கவனிக்கும் போது தேங்காய் விலை குறைவதற்கான வாய்ப்பு தற்போதைக்கு இல்லை. ஆனால் சந்தையில் குறைவான விலையில் தேங்காய் மற்றும் கொப்பரைகளை அதிக அளவில் கொள்முதல் செய்வதற்காக தான் சில நிறுவனங்களும், வியாபாரிகளும் தற்காலிக

விலை வீழ்ச்சியை உருவாக்குகிறார்கள்.அடுத்து வருகின்ற விழா காலங்களில் தேவை அதிகமாக உள்ளதால் தென்னை விவசாயிகள், தென்னை உற்பத்தியாளர்கள் சங்கம், தென்னை உற்பத்தியாளர்கள், நிறுவனங்கள் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும். சூழ்ச்சிகளை முறியடிக்க வேண்டும்தென்னை விவசாயிகள் தவறான தகவல்களை நம்பி குறைவான விலையில் தங்களது தேங்காய்களை விற்க வேண்டாம். தற்போது தென்னை விவசாயிகள் ஆரம்ப கட்ட பதனிடுவதிலும், மதிப்பு கூட்டும் பொருளாக மாற்றுவதிலும் கவனம் செலுத்த வேண்டும். கூட்டமைப்புகள் நவீன கொப்பரை உலர்த்திகள் அமைக்க கவனம் செலுத்த வேண்டும். அதில் கிடைக்கும் கொப்பரைகளை பயன்படுத்தி தென்னை உற்பத்தியாளர்கள், நிறுவனங்கள் கலப்படமில்லாத, தரமான தங்களது பெயரில் தேங்காய் எண்ணெயை உற்பத்தி செய்ய வேண்டும்.

தேங்காயில் இருந்து தயாரிக்கப்படும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் விலை தேங்காயின் விலையை சார்ந்து இருப்பதில்லை. விவசாயிகள் ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம் இளநீர் சந்தையில் கூடுதல் பலன்களை பெற முடியும். சூழ்நிலைக்கு ஏற்ப விவசாயிகள் தங்களது பொருட் களுக்கு கூடுதல் விலை பெற சந்தையில் நிலவும் சூழ்ச்சிகளை முறியடித்து செயல்பட முன் வர வேண்டும்.இவ்வாறு அதில் கூறப்பட்டு இருந்தது.

## மாவட்டம் முழுவதும் பரவலாக மழை: லக்கூரில் 138 மில்லி மீட்டர் பதிவு



கடலூர்,

மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக லக்கூரில் 138 மில்லி மீட்டர் மழை பதிவாகியது.

<u>பலத்த மழை</u>

கடலூர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கோடையை மிஞ்சும் வகையில் வெயில் வாட்டி வதைத்து வந்தது. இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமப்பட்டு வந்தனர். சாலையில் அனல் காற்று வீசியதால் வாகன ஓட்டிகள் அவதி அடைந்தனர். நேற்று முன்தினமும் காலை முதல் மாலை வரை வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இதன் காரணமாக சிறுவர்கள், பெரியவர்கள் வரை மிகவும் கஷ்டப்பட்டனர்.

இந்நிலையில் இரவு 12.45 மணி அளவில் திடீரென குளிர்ந்த காற்று வீசத்தொடங்கியது. சற்று நேரத்தில் சாரல் மழை பெய்தது. அதன்பிறகு பலத்த மழை கொட்டியது. நள்ளிரவில் பெய்த இந்த மழை 2 மணி வரை நீடித்தது. இந்த மழையினால் முக்கிய சாலைகளில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான இடங்களில் மழை வெள்ளம் தேங்கி நின்றது.

<u>மழை நீர் தேங்கியது</u>

குறிப்பாக கடலூர் லாரன்ஸ் சாலையில் உள்ள ரெயில்வே சுரங்கப்பாதையில் மழை நீர் குட்டை போல் தேங்கி நின்றது. மஞ்சக்குப்பம் மைதானம், அண்ணா விளையாட்டு மைதானத்தில் குளம் போல் தண்ணீர் தேங்கி நின்றதை காண முடிந்தது. தாழ்வான குடியிருப்புகளையும் மழைநீர் சூழ்ந்தது. இதேபோல் தொழுதூர், விருத்தாசலம், வானமாதேவி, காட்டுமயிலூர், குப்பநத்தம், பண்ருட்டி, லக்கூர், பெலாந்துறை உள்பட பல்வேறு இடங்களிலும் மழை பெய்தது.

இந்த மழையால் வெப்பம் தணிந்து குளிர்ச்சியான சூழ்நிலை நிலவியது. நேற்று காலையில் வானம் மேக மூட்டமாக இருந்தது. அதைத்தொடர்ந்து மஞ்சக்குப்பம் உள்ளிட்ட சில இடங்களில் சிறிது நேரம் லேசான சாரல் மழை பெய்தது. காலை 9 மணிக்கு பிறகு வெயில் அடித்தது.

<u>லக்கூரில் 138 மில்லி மீட்டர் மழை</u>

இருப்பினும் கடலூர் மாவட்டத்தில் நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக லக்கூரில் 138 மில்லி மீட்டர் மழை பதிவாகியது. குறைந்தபட்சமாக பண்ருட்டியில் 1 மில்லி மீட்டர் மழை பதிவாகியது.

மற்ற இடங்களில் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் விவரம் வருமாறு:–

தொழுதூர் – 82

காட்டுமயிலூர் – 73

வேப்பூர் – 30

மே.மாத்தூர் – 69

விருத்தாசலம் – 45

கீழ்செறுவாய் – 45

குப்பநத்தம் – 38.40

கடலூர் – 21.10

வானமாதேவி – 15.20

பெலாந்துறை – 11

## மாவட்டம் முழுவதும் பலத்த மழை ஒகேனக்கல்லில் அதிக பட்சமாக 108 மி.மீ. பதிவானது

தர்மபுரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அதிகாலை வரை பலத்த மழை பெய்தது. மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இடி, மின்னலுடன் மழை பெய்தது. இந்த மழை காரணமாக ஏரி, குளங்களில் ஓரளவுக்கு தண்ணீர் தேங்கியது. சிறுதானிய பயிர்களான கம்பு, சோளம், கேழ்வரகு போன்றவற்றை சாகுபடி செய்த விவசாயிகள் இந்த மழை காரணமாக மகிழ்ச்சி அடைந்தனர். கடந்த சில வாரங்களாக தர்மபுரி மாவட்டத்தில் வெயிலின் தாக்கம் வழக்கத்தை விட படிப்படியாக அதிகரித்து வந்தது. இந்த நிலையில் மாவட்டம் முழுவதும் பரவலாக கன மழை பெய்ததால் வெட்கை தணிந்து குளிர்ச்சியான சீதோஷ்ண நிலை ஏற்பட்டுள்ளது. மாவட்டத்தில் அதிகபட்சமாக ஒகேனக்கல்லில் 108 மி.மீ. மழையும், தர்மபுரியில் 71 மி.மீ. மழையும், பாப்பிரெட்டிப்பட்டியில் 62 மி.மீ. மழையும், பென்னாகரத்தில் 66 மி.மீ. மழையும் பதிவானது. அரூரில் 26 மி.மீ. மழையும், பாலக்கோட்டில் 12 மி.மீ. மழையும் பெய்தது. இந்த மழை காரணமாக தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## குமரி மாவட்டம் முழுவதும் பலத்த மழை அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரிப்பு



குமரி மாவட்டம் முழுவதும் நேற்று பலத்த மழை பெய்தது. இதனால் அணைகளுக்கு 1000 கன அடி தண்ணீர் வருகிறது. இதமான சீதோஷ்ணநிலைகுமரி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக கடுமையான வெயிலும், திடீர், திடீரென சாரல் மழை பெய்வதுமாக இருந்து வருகிறது. நாகர்கோவில் மற்றும் சுற்று வட்டாரப்பகுதிகளில் நேற்று காலையிலும் வழக்கம்போல் வெயில் இருந்தது. மதியம் சுமார் 12 மணி அளவில் திடீரென வானம் கருமேகக் கூட்டங்கள் சூழ மப்பும், மந்தாரமுமாக காட்சி அளித்தது.அதேநேரத்தில் பூதப்பாண்டி, பார்வதிபுரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்து கொண்டிருந்தது. ஆனால் நாகர்கோவில் பகுதியில் சில மணி நேரங்கள் வரை மழை பெய்யவில்லை. இதனால் ஊட்டி, கொடைக்கானல் பகுதிகளில் காணப்படுவது போன்ற ஜில்லென்ற சீதோஷ்ண நிலை நிலவியது. கடுமையான வெயிலின் வெப்பத்தில் தவித்த மக்களுக்கு இந்த சீதோஷ்ண நிலை இதமாக இருந்தது. சாலைகளில் வெள்ளம்இந்தநிலையில் பிற்பகல் சுமார் 2.30 மணி அளவில் நாகர்கோவில் நகரில் திடீரென மழை பெய்யத் தொடங்கியது. இந்த மழை சுமார் 1 மணி நேரம் வரை கொட்டித் தீர்த்தது. அதன்பிறகு சிறிது நேரம் மழை ஓய்ந்தது. பின்னர் மீண்டும் மழை கொட்டியது. இவ்வாறு இரவு வரை விட்டு, விட்டு மழை பெய்து கொண்டிருந்தது.

இதனால் நாகர்கோவில் கேப் ரோடு, கே.பி.ரோடு, செம்மாங்குடி ரோடு, அவ்வை சண்முகம் சாலை, இந்துக்கல்லூரி ரோடு, பெண்கள் கிறிஸ்தவக்கல்லூரி ரோடு, வடசேரி ரோடு உள்ளிட்ட முக்கிய சாலைகள் அனைத்திலும் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் கார் உள்ளிட்ட வாகனங்கள் மழைத்தண்ணீரில் தத்தளித்தபடி சென்றன. சாலையில் நடந்து சென்ற பாதசாரிகள் குடைகளைப் பிடித்தபடி சென்றதை காண முடிந்தது. இந்த மழை குமரி மாவட்டம் முழுவதும் நேற்று பரவலாக இருந்தது.எந்தெந்த பகுதிகளில்...குறிப்பாக ஆரல்வாய்மொழி, செண்பகராமன்புதூர், மாதவலாயம் பகுதிகளில் நேற்று காலையில் இருந்தே தூரல் மழை இருந்தது. பூதப்பாண்டி, திட்டுவிளை, இறச்சகுளம், கடுக்கரை பகுதிகளிலும் பரவலாக மழை பெய்தது. கன்னியாகுமரி, கொட்டாரம் பகுதிகளில் மழை இல்லை. ஆனால் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. தக்கலை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் காலையில் இருந்தே மழை பெய்து கொண்டிருந்தது.

மார்த்தாண்டம், குழித்துறை பகுதிகளில் லேசான தூரல் மழை பெய்தது. குலசேகரம், திற்பரப்பு, பேச்சிப்பாறை, கோதையாறு, பெருஞ்சாணி பகுதிகளிலும், மலையோர பகுதிகளிலும் கனமழை பெய்தது. களியக்காவிளை, மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகள் அனைத்திலும் காலையில் இருந்து கனமழை பெய்தது. இதனால் ரோடுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. மழை அளவு விவரம்

நேற்று காலை 6 மணி வரையிலான 24 மணி நேரத்தில் குமரி மாவட்டத்தில் பெய்த மழை அளவு விவரம் (மி.மீ.) வருமாறு:– பெருஞ்சாணி– 5, சிற்றார் 1– 8.8, முக்கடல்– 2, இரணியல்– 5.2, ஆணைக்கிடங்கு– 3, குளச்சல்– 8.6, அடையாமடை– 13, கோழிப்போர்விளை– 13.5, முள்ளங்கினாவிளை– 2, புத்தன் அணை– 6.4,

திற்பரப்பு– 21, நாகர்கோவில்– 0.6, பூதப்பாண்டி– 1, சுருளோடு– 22.4, கன்னிமார்– 15.7, பாலமோர்– 8.5, மயிலாடி– 1.4, கொட்டாரம்– 2.4 .

அதிகரிப்பு

குமரி மாவட்டத்தில் தற்போது பெய்து வரும் மழையினால் அணைகளுக்கு தண்ணீர் வரத்து இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் நேற்று அணைகளுக்கு வரும் தண்ணீரின் வரத்து அதிகமாக இருந்தது. நேற்றைய நிலவரப்படி பேச்சிப்பறை அணைக்கு வினாடிக்கு 615 கன அடி தண்ணீர் வந்தது. அணையில் இருந்து 732 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. பெருஞ்சாணி அணைக்கு 306 கன அடி தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து 125 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. சிற்றார்–1 அணைக்கு 36 கன அடி தண்ணீரும், சிற்றார்–2 அணைக்கு 57 கன அடி தண்ணீரும், மாம்பழத்துறையாறு அணைக்கு ஒரு கன அடி தண்ணீரும் வந்து கொண்டிருந்தது.

## 111 விவசாயிகளுக்கு ரூ.27¾ லட்சம் கடன் உதவி

நாகை மாவட்டம் கீழையூர் ஒன்றியம் திருப்பூண்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் இயக்குனர்கள் கூட்டம் வங்கி கட்டிடத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு வங்கி தலைவர் வேதையன் தலைமை தாங்கினார். செயலாளர் பார்த்திபன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் சங்கத்தின் விழுந்தமாவடி கிளையின் 2014-15-ம் ஆண்டின் வரவு-செலவு இனங்களை அங்கீகரிப்பது, சங்கத்திற்கு 2015-16-ம் ஆண்டிற்கான உத்தேச வரவு-செலவு திட்டம் தயாரிப்பது, 2013-14-ம் ஆண்டு லாபத்தொகை ரூ.32 லட்சத்து 66 ஆயிரத்து 353-ஐ லாப பிரிவினை செய்வது என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதைத்தொடர்ந்து கூட்டத்தில் வங்கியின் மூலம் விவசாயிகள் 111 பேருக்கு ரூ.27 லட்சத்து 87 ஆயிரத்து 359 மதிப்பில் விவசாய கடன் வழங்கப்பட்டது. கூட்டத்தில் வங்கியின் இயக்குனர்கள்

முத்துமாரி, ரகுபதி, அப்துல்அஜிஸ், ஜெயராணி, செல்வி, பரக்கத் நாச்சியார், ராதாகிருஷ்ணன், ஒன்றிய குழு உறுப்பினர் சுல்தான்ஆரிபு, கணக்கர் ராமு உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## 955 மஞ்சள் மூட்டைகள் ரூ.43 லட்சத்திற்கு ஏலம் மழையின் காரணமாக விலை சரிவு



நாமகிரிப்பேட்டையில் 955 மஞ்சள் மூட்டைகள் ரூ.43 லட்சத்திற்கு ஏலம் விடப்பட்டது. மழையின் காரணமாக மஞ்சளின் விலை சரிவு அடைந்து உள்ளது.

மஞ்சள் ஏலம்நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அருகே நாமகிரிப்பேட்டையில் உள்ள ராசிபுரம் தாலுகா கூட்டுறவு உற்பத்தியாளர் மற்றும் விற்பனை சங்கம் கிளை வளாகத்தில் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது. வழக்கம்போல் நேற்று மஞ்சள் ஏலம் நடந்தது. இந்த ஏலத்தில் நாமகிரிப்பேட்டை, ஒடுவன்குறிச்சி, புதுப்பட்டி, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, அரியாக்கவுண்டம்பட்டி, ஆத்தூர், ஊனத்தூர் உள்பட

பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள் மஞ்சளை விற்பனை செய்வதற்காக ஏலத்திற்கு கொண்டு வந்திருந்தனர். இந்த ஏலத்தில் மஞ்சளை ஏலம் எடுப்பதற்காக சேலம், ஈரோடு, நாமகிரிப்பேட்டை, ஒடுவன்குறிச்சி உள்பட பல பகுதிகளில் இருந்து வியாபாரிகள் வந்திருந்து மஞ்சளை போட்டி போட்டு ஏலம் எடுத்தனர். 955 மூட்டைகள் ரூ.43 லட்சத்திற்கு ஏலம்

இந்த ஏலத்தில் விரலி ரகம் 750 மூட்டைகளும், உருண்டை ரகம் 195 மூட்டைகளும், பனங்காளி ரகம் 10 மூட்டைகளும் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் விரலி ரகம் குறைந்தபட்சம் ஒரு குவிண்டால் ரூ.7,099-க்கும், அதிகபட்சமாக ரூ.8,809-க்கும், உருண்டை ரகம் ஒரு குவிண்டால் குறைந்தபட்சம் ரூ.6,459-க்கும், அதிகபட்சமாக ரூ.7,909-க்கும், பனங்காளி ரகம் குறைந்தபட்சம் ஒரு குவிண்டால் ரூ.8,800-க்கும், அதிகபட்சமாக ரூ.13,000-க்கும் ஏலம் போனது.

நேற்று நடந்த ஏலத்தில் மொத்தம் 955 மஞ்சள் மூட்டைகள் ரூ.43 லட்சத்திற்கு ஏலம் விடப்பட்டது. கடந்த வாரத்தைக் காட்டிலும் இந்த வாரம் நடந்த ஏலத்தில் விவசாயிகள் அதிக அளவில் மஞ்சள் கொண்டு வந்திருந்தனர். ஆனால் கடந்த வாரத்தை விட ஒரு குவிண்டாலுக்கு ரூ.500 முதல் 800 வரை விலை குறைந்து உள்ளது.

மழையால் விலை சரிவு

இதற்கு காரணம் கடந்த 4 நாட்களாக தொடர் மழை பெய்து வருவதால் வியாபாரிகள் மஞ்சளை வாங்கி இருப்பு வைக்க விரும்பவில்லை என்று கூறப்படுகிறது. இதுவே விலை சரிவுக்கு காரணம் என்று கூறப்படுகிறது.

இந்த விலை சரிவால் விவசாயிகள் கவலை அடைந்தனர். நேற்று நடந்த

ஏலத்தில் மஞ்சள் வரத்து அதிகமாக இருந்தது. ஆனால் விலை குறைந்து காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## குரும்பலூர் பேரூராட்சி பகுதியில் சீமை கருவேல மரங்களை அகற்றி தூர்வாரியதால் 2 குளங்களில் மழைநீர் நிரம்பியது



குரும்பலூர் பேரூராட்சி பகுதியில் சீமை கருவேல மரங்களை அகற்றி தூர்வாரி வரத்து வாய்க்காலை சீரமைத்ததால், கடந்த 2 நாட்களாக பெய்த மழையில் 2 குளங்கள் நிரம்பின வாய்க்கால்கள் தூர்வாரப்பட்டதுபெரம்பலூர் மாவட்டம் குரும்பலூர் பேரூராட்சி மூலம் வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்னர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நீர்நிலைகளை தூர்வாரி மழைநீரினை சேகரிக்கும் பொருட்டும், நிலத்தடி நீரினை மேம்படுத்திடவும் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாத்து, மழைநீரை சேமிப்பதற்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கடந்த 19-ந் தேதி நீர்நிலைகளில் அடர்ந்து வளர்ந்துள்ள சீமைக்கருவேல் மரங்கள் பொதுமக்களின் ஒத்துழைப்புடன், பேரூராட்சி பணியாளர்களை கொண்டு அகற்றப்பட்டு, குளத்தின் வரத்து வாய்க்கால்கள்

தூர்வாரப்பட்டது.

நிலத்தடி நீர் மட்டம் உயர்வுஇந்த நிகழ்வு பொதுமக்களிடையே நல்ல வரவேற்பையும் பெற்றதால், பெரும்பாலான பொதுமக்களும் தங்களை இப்பணியில் இணைத்துக்கொண்டனர். இதனால் குரும்பலூர் பேரூராட்சியில் கடந்த 2 தினங்களுக்கு முன்பு பெய்த கன மழையின் காரணமாக, பேரூராட்சிக்குட்பட்ட தெப்பகுளத்திலும், மருதையான் குளத்திலும் மழைநீர் நிரம்பி உள்ளது. மேலும் 8-வது வார்டு குப்புரெட்டியார் குளமும் மற்றும் 3-வது வார்டு ஆண்டியான் குளமும் மழைநீர் நிரம்பிய நிலையில் உள்ளது. இதனால் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்திட வழி ஏற்பட்டுள்ளது என்று குரும்பலூர் பேரூராட்சி செயல் அலுவலர் குமரன் தெரிவித்துள்ளார்.

## கோட்டைப்பட்டினம் மீனவர் வலையில் சிக்கிய 100 கிலோ எடை திருக்கை மீன்



புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினத்தில் இருந்து 150 விசைப்படகுகளில் 500-க்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். அவர்கள் மீன்பிடித்து கொண்டு நேற்று கரை திரும்பினர். அப்போது மீனவர் ஒருவர் வலையில் 100 கிலோ எடை கொண்ட

திருக்கை மீன் சிக்கியது. இந்த ஒரு மீனின் விலை ரூ.5 ஆயிரம் ஆகும். இதனால் அந்த மீனவர் மகிழ்ச்சி அடைந்துள்ளார். 100 கிலோ எடை கொண்ட திருக்கை மீனை அப்பகுதி பொதுமக்கள் ஆர்வத்துடன் வந்து பார்த்து சென்றனர்.



**வேளாண்மை தொழில் நுட்ப விளக்க கூட்டம்**

அயோத்தியாப்பட்டணம் வேளாண்மை தொழில் நுட்ப முகமை திட்டம் (அட்மா) குறித்து விவசாயிகளுக்கான விளக்க கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு அட்மா தலைவர் ஏ.பி.மணி தலைமை தாங்கினார். வேளாண் மை உதவி இயக்குனர் பாலையா முன்னிலை வகித்து பேசினார். அட்மா தொழில் நுட்ப மேலாளர் செல்வி வரவேற்றார். கூட்டத்தில் வேளாண்மை அலுவலர் பிரேமா, வேளாண்மை பொறியியல் துறை உதவி மண் வள பாதுகாப்பு அலுவலர் செல்வன், தோட்டக்கலைத்துறை அலுவலர் மகாலிங்கம், இளநிலை ஆய்வாளர் சுதாபிரியா ஆகியோர் வேளாண்மை திட்டங்கள் குறித்தும், விவசாயிகளின் சந்தேகங்களுக்கும் விளக்கமளித்து பேசினார்கள்.

## 1,223 டன் யூரியா உரம் தஞ்சைக்கு வந்தது 4 மாவட்டங்களுக்கு லாரிகளில் அனுப்பி வைக்கப்பட்டன



சென்னையில் இருந்து சரக்குரெயிலில் 1,223 டன் யூரியா உரம் தஞ்சைக்கு வந்தது. பின்னர் இந்த உரம் 4 மாவட்டங்களுக்கு லாரிகளில் அனுப்பி வைக்கப்பட்டன.

சம்பா சாகுபடிதமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் விளங்கி வருகிறது. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இது தவிர கோடை நெல் சாகுபடியும் நடைபெறும். இந்த ஆண்டு குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்படவில்லை. இதனால் ஆழ்குழாய் கிணறு மூலம் குறைந்த அளவே குறுவை சாகுபடி நடைபெற்றுள்ளது. இந்த குறுவை சாகுபடிக்கு தேவையான உரங்கள் தஞ்சை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் தனியார் உரக்கடைகளில் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.மேலும் தேவைக்கு ஏற்ப பிற மாவட்டங்களில் இருந்து உரம் இறக்குமதி செய்யப்பட்டும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்தநிலையில் சம்பா சாகுபடிக்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. தஞ்சை

மாவட்டத்தில் இந்த ஆண்டு 1 லட்சத்து 38 ஆயிரத்து 500 எக்டேர் பரப்பில் சம்பா சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு நடவு பணி நடைபெற்று வருகிறது. சம்பா சாகுபடிக்கு தேவையான உரம் வெளிமாவட்டங்களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது.

1,223 டன் யூரியா உரம்அதன்படி சம்பா சாகுபடிக்காக சென்னை மணலியில் இருந்து யூரியா உரமூட்டைகள் சரக்குரெயிலில் ஏற்றப்பட்டு தஞ்சைக்கு கொண்டு வரப்பட்டன. தஞ்சை ரெயில் நிலையத்திற்கு நேற்றுகாலை உரமூட்டைகள் ஏற்றப்பட்ட சரக்குரெயில் வந்து சேர்ந்தது. மொத்தம் 21 வேகன்களில் 1,223.4 டன் யூரியா உரமூட்டைகள் வந்திருந்தது. பின்னர் இந்த உரமூட்டைகளை தொழிலாளர்கள் லாரிகளில் ஏற்றினர். பின்னர் இந்த உரமூட்டைகள் தஞ்சை, நாகை, திருவாரூர், புதுக்கோட்டை ஆகிய 4 மாவட்டங்களில் உள்ள தனியார் உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டன.

தஞ்சை மாவட்டத்திற்கு 582.8 டன்னும், திருவாரூர் மாவட்டத்திற்கு 406.2 டன்னும், புதுக்கோட்டை மாவட்டத்திற்கு 58.6 டன்னும், நாகை மாவட்டத்திற்கு 175.8 டன்னும் யூரியா மூட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டன.

தினகரன்

**இயந்திர நெல் நடவு செய்தால் ஏக்கருக்கு ₹3 ஆயிரம் மானியம் ஆற்காடு வேளாண்மை உதவி இயக்குநர் தகவல்**

ஆற்காடு, : இயந்திர நெல் நடவு செய்தால் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ₹3 ஆயிரம் மானியமாக வழங்கப்படும் என ஆற்காடு வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: ஆற்காடு வட்டாரத்தில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் தற்போது நிலவி வரும் கூலியாட்கள் பற்றாக்குறை போக்குவதற்கும், விதை செலவினை குறைக்கவும் எளிதாக பராமரிக்க ஏதுவாக திருந்திய நெல் சாகுபடியினை இயந்திரம் மூலம் நடவு செய்யலாம். அவ்வாறு இயந்திரம் மூலம் நடவு செய்வதால் நாற்றுகள் ஒரே சீராக வளர்ந்து அதிக தூர் வெடித்து நெல் உற்பத்தி அதிகமாகும். இதன் மூலம் விவசாயிகள் அதிக லாபம் பெறலாம். மேலும் இயந்திரம் மூலம் நெல் நடவு செய்யும் விவசாயிகளுக்கு தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஏக்கருக்கு ₹3 ஆயிரம் மானியமாக வழங்கப்பட உள்ளது. எனவே, நெல் சாகுபடி செய்யும் அனைத்து விவசாயிகளும் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இயந்திரம் மூலம் நடவு செய்யும் விவசாயிகள் ஆற்காடு மற்றும் சக்கரமல்லூர் வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களை தொடர்பு கொள்ளலாம். மேலும் தொடர்புக்கு ஆற்காடு ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் உள்ள வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தையும் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**மக்களை ஏமாற்றும் பிரபல நிறுவனங்கள்: சூரியகாந்தி, கடலை எண்ணெய்யில் கலப்படம்: நுகர்வோர் அமைப்பு ஆய்வில் அதிர்ச்சி தகவல்**



கடலை எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் என்ற பெயரில் பிரபல நிறுவனங்கள் விற்றுவரும் பல பாக்கெட்களில் பாமாயில், பருத்திவிதை எண்ணெய் கலப்படம் செய்யப்பட்டிருப்பது நுகர்வோர் அமைப்பின் ஆய்வில் தெரியவந்துள்ளது.

'தூய்மையான கடலை எண்ணெய், நல்லெண்ணைய்யை சமையலில் சரியான அளவில் பயன்படுத்துவது உடலுக்கு நல்லது' என்று சமீபகால ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. இதை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்ட ஒருசில எண்ணெய் விற்பனை நிறுவனங்கள் விலை குறைவான பாமாயில், பருத்திவிதை எண்ணெய், தவிட்டு எண்ணெய் போன்றவற்றை கலப்படம் செய்து கடலை எண்ணெய் என்ற பெயரில் விற்பது இந்திய நுகர்வோர் சங்கம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

கன்ஸ்யூமர்ஸ் அசோஷியேஷன் ஆஃப் இந்தியா (சிஏஐ) எனப்படும் இந்த அமைப்பு சென்னையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கிவருகிறது. நுகர்வோர் பாதுகாப்புக்காக 30 ஆண்டுகளுக்கு மேலாக குரல் கொடுத்துவந்த இதன் நிறுவனர் தேசிகன் கடந்த ஜூன் மாதம்

மறைந்தார். அதன் பிறகு, அவரது மனைவி நிர்மலா தேசிகன் இந்த அமைப்பை நிர்வகித்து வருகிறார். எண்ணெய் கலப்படம் குறித்து இந்த அமைப்பின் துணை இயக்குநர் எம்.ஆர்.கிருஷ்ணன் கூறியதாவது:

சென்னை, விழுப்புரம், சேலம், தருமபுரி, திருச்சி, ஈரோடு ஆகிய 6 மாவட்டங்களில் 14 நிறுவனங்களின் கடலை எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் பாக்கெட்களை எங்கள் அமைப்பை சேர்ந்தவர்கள் சோதனை செய்தனர். தமிழக சுகாதாரத் துறையின் கீழ் இயங்கிவரும் சென்னை கிண்டி கிங்க்ஸ் பரிசோதனைக் கூடம் உட்பட 3 பரிசோதனைக் கூடங்களில் இவை சோதனை செய்யப்பட்டன. அவற்றின் முடிவு அதிர்ச்சி அளிப்பதாக இருந்தது.

'கடலை எண்ணெய்' என்று விற்கப்பட்ட 4 பிராண்டுகளின் பாக்கெட்களில் முழுக்க பாமாயில் மட்டுமே இருந்தது. ஒரு பாக்கெட் டில் பருத்திவிதை எண்ணெய் மட்டுமே இருந்தது. ஒரு பாக்கெட் டில் 90 சதவீதம் பாமாயில், 10 சதவீதம் கடலை எண்ணெய் இருந் தது. ஒரு சூரியகாந்தி எண்ணெய் பாக்கெட்டில் 50 சதவீதம் பாமாயில், 50 சதவீதம் பருத்திவிதை எண்ணெய் இருந்தது.

சமையல் எண்ணெய் பாக்கெட்டில் அக்மார்க் முத்திரை கட்டாயம் என உணவு பாதுகாப்பு விதிமுறை உள்ளது. ஆனால், 42 சதவீத சமையல் எண்ணெய் பாக்கெட்களில் அக்மார்க் முத்திரை இல்லை. உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய விதிகள் 2011-ன்படி அனைத்து உணவுப் பொருள் பாக்கெட்களிலும் உணவுப் பாதுகாப்பு தர நிர்ணய ஆணையத்தின் (FSSAI) குறியீடு, உரிமம் எண் குறிப்பிடப்பட வேண்டும். ஆனால், 79 சதவீத சமையல் எண்ணெய் பாக்கெட்களில் அந்த குறியீடு இல்லை. 64 சதவீத பாக்கெட்களில் உரிமம் எண் இல்லை. கலப்படம் இல்லாத சுத்தமான கடலை எண்ணெய் ஒரு லிட்டர் விலை ரூ.105 முதல் ரூ.120 வரை உள்ளது. ஒரு லிட்டர் பாமாயில் விலை ரூ.52 மட்டுமே. அதனால், பாமாயிலை நிறம், மணம் நீக்கி ரீஃபைண்டு செய்து, கடலை

எண்ணெய் என்ற பெயரில் அதிக விலைக்கு விற்று மோசடி செய்கின்றனர்.

இவ்வாறு எம்.ஆர்.கிருஷ்ணன் கூறினார்._

**காணாமல்போன செக்குகள்_**

சென்னையில் இயற்கை அங்காடி நடத்தும் அனந்து என்பவர் கூறியபோது, ''ஒரு லிட்டர் கடலை எண்ணெய் தயாரிக்க 2.5 கிலோ கடலை தேவை. ஒரு கிலோ கடலை விலை ரூ.100 முதல் ரூ.110 வரை. எனவே, கலப்படமின்றி சுத்தமாக ஒரு லிட்டர் கடலை எண்ணெய் தயாரிக்க குறைந்தபட்சம் ரூ.250 ஆகும். இதனால், செக்குகளில் ஆட்டப்படும் கடலை எண்ணெய் விலை அதிகமாக இருந்தது. மேலும், செக்கில் பாரம்பரிய முறையில் தயாரிக்கப்படும் எண்ணெயில்தான் உடலுக்கு நன்மை தரும் புரதம், நல்ல கொழுப்புச் சத்துகள் ஆகியவை சிதையாமல் கிடைக்கும். பாக்கெட்களில் குறைந்த விலையில் கிடைக்கிறதே என்று தரமற்ற எண்ணெயை மக்கள் வாங்கத் தொடங்கியதால், வருமானமின்றி செக்குகள் மூடப்பட்டுவிட்டன. நம் கண் முன்பாகவே கடலையைப் போட்டு எண்ணெய் எடுத்து தரும் செக்குகள் இப்போது இல்லை. கண்ணுக்குத் தெரியாமல் நடக்கிற இயந்திர சுத்திகரிப்பு முறை நடைமுறைக்கு வந்ததில் இருந்தே, கலப்படமும் தொடங்கிவிட்டது'' என்றார்.

உணவு பாதுகாப்பு சட்டத்தை அமல்படுத்த அவகாசம்_: பிரதமருக்கு முதல்வர் வேண்டுகோள்_

தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தை அமல்படுத்துவதற் கான காலஅவகாசத்தை குறைந்தபட்சம் ஓராண்டாவது நீட்டிக்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடிக்கு முதல்வர் ஜெயலலிதா வேண்டு கோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக பிரதம ருக்கு நேற்று அவர் எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதா வது: தேசிய உணவு பாது காப்பு சட்டத்தை நடைமுறைப் படுத்துவது தொடர்பாக பல் வேறு ஆலோசனைகளை தங்களிடம்

3.6.2014 மற்றும் 7.8.2014 அன்று சமர்ப்பிக்கப் பட்ட கோரிக்கை மனுக்கள் வாயிலாக வலியுறுத்தியிருந் தேன். அவை எல்லாம் திருப்தி கரமாக பரிசீலிக்கப்படாத சூழலில் பொது விநியோக திட்டத்துக்கான தகுதியான பயனாளிகளை அடையாளம் காணும் வகையில் தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தை அமல்படுத்த குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் காலஅவகாசம் வழங்குமாறு கோரியிருந்தேன்.

பயனாளிகளை அடை யாளம் காணவும், தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தை அமல்படுத்திடவும் மத்திய அரசு அனைத்து மாநிலங் களுக்கும் 30.9.2015 வரை காலஅவகாசம் வழங்கியிருக் கிறது. இந்த சட்டத்தை நடை முறைப்படுத்துவது தொடர்பாக தமிழக அரசு எழுப்பியிருந்த பிரச்சினை களை திருப்திகரமாக கருத் தில்கொள்ளாமல் வெகு விரைவாக இச்சட்டத்தை அமல் படுத்துமாறு மத்திய நுகர்வோர் பாதுகாப்பு, உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சர் கடந்த 17.9.2015 தேதியிட்ட கடிதத்தில் வலியு றுத்தியுள்ளார்.

மத்திய அரசு நிர்ணயித் துள்ள 17.9.2015 என்ற காலக் கெடு என்பது நடைமுறையில் சாத்தியமில்லாத ஒன்று. எனவே, தேசிய உணவு பாது காப்பு சட்டத்தை அமல்படுத்து வதற்கான காலஅவகாசத்தை குறைந்தபட்சம் ஓராண்டாவது நீட்டிக்க வேண்டும். மேலும், தமிழகத்துக்கான உணவு தானிய ஒதுக்கீடு குறைக்கப் படாமல் தொடர்ந்து தற் போதைய அளவு தொடர வேண்டும்.

இவ்வாறு அந்த கடிதத்தில் கூறியுள்ளார்.___

## தமிழகத்தில் மழை தொடரும்_

தமிழகத்தின் உள் மாவட்டங்களில் கனமழை தொடரும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு பருவக் காற்று சற்று வலுவாக இருப்பதால் தென் தமிழகத்தின் உள் மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் மனமேல்குடியில் 9 செ.மீ., சிவகங்கை மாவட்டம் திருப்பத் தூர், கடலூர் மாவட்டம் தொழுதூர், திருவண்ணாமலை மாவட்டம் சாத்தனூர் ஆகிய இடங்களில் 8 செ.மீ., திருவண்ணாமலை மாவட்டம் செங்கத்தில் 7 செ.மீ., புதுக்கோட்டை மாவட்டம் கீரனூரில் 6 செ.மீ. நேற்று முன் தினம் பதிவாகியது. இதுதவிர கோவை, நீலகிரி, தேனி, தஞ்சாவூர், கிருஷ்ணகிரி, திண்டுக்கல், திருவள்ளூர், விழுப்புரம், விருதுநகர், வேலூர் உள்ளிட்ட பல மாவட்டங்களில் மழை பெய்துள்ளது.

மேற்கு மத்திய வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை வலுவிழந்து காற்று மேல் அடுக்கு சுழற்சியாக கடலோர ஆந்திரம் அருகே நிலவுகிறது. இதனால் தமிழகத்தின் உள் மாவட்டங்களில் கனமழை தொடர வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள் ளது.